OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD.
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பேர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 06 ஞாயிற்றுக்கிழமை (21 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 358

## பூநகரித் தாக்குதலில் ****************************************

# கொலையுண்ட படையினரின் சரியான எண்ணிக்கையை வெளியிடத் தயக்கம்

### உத்தியோகபூர்வ அறிவிப்பில்லை

கொழும்பு, நவம்பர் 21

பதினொரு நாட்களுக்கு முன்னர் நடந்த பூநகரித் தாக்குதலில் மாண்ட படையினரின் சரியான எண்ணிக்கையை வெளியிடுவதற்கு அரசு பெரும் தயக்கம் காட்டி வருகிறது.

விடுதலைப் புலிகள் நடத்திய அந்த வெற்றிகரத் தாக்குதலில் இறந்தவர் எண்ணிக்கை, காயமுற்றவர் எண்ணிக்கை ஆகியவற்றை உத்தியோகபூர்வமாக வெளியிடாமல்—

முரண்பாடானதும், மறைமுகமானதுமான தகவல்களை அரசு வெளியிட்டு வருகிறது;

பூநகரித் தாக்குதலில் கொலையுண்ட படையினரின் சரியான எண்ணிக்கையை உத்தியோக பூர்வமாக வெளியிட்டால் —

ஏற்கனவே அதிர்ச்சியும், ஆத்திரமும், வேதனையும் அடைந்துள்ள சிங்கள மக்கள்—

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றை நடத்தி, தெற்கில் குழப்பத்தை உண்டு பண்ணலாம் — என்று அஞ்சியே சரியான எண்ணிக்கையை வெளியிடுவதற்கு அரசு பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உத்தியோகப் பற்றற்ற ரீதியில் வெளியான தகவல்களின் பிரகாரம் 637 படையினரை அரசு இழந்திருப்பதாகவும் —

558 பேர் படுகாயமடைந்தனர் என்றும் — தெரிவிக்கப் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரித் தாக்குதல்

# இராணுவ நீதிமன்றம் விசாரணை நடத்தும்

கொழும்பு, நவ. 21

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியது பற்றி விசாரிக்க இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

நான்கு உறுப்பினர்களைக் கொண்ட இந்த இராணுவ விசாரணை நீதிமன்றத்துக்கு பிரிகேடியர் நந்தன டி சில்வா தலைமை வகிப்பார். பிரிகேடியர் சதீத் ஜயசுந்தர, கேணல் சரத் பொன்சேகா, லெப். கேணல் இரத்தினசபாபதி ஆகியோர் நீதிமன்றத்தின் மற்ற உறுப்பினர்கள் ஆவர். இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினா இந்த நியமனத்தைச் செய்துள்ளார். (இ-5)

# வதந்திகள் குறித்து அஞ்ச வேண்டாம்

### பொதுமக்களுக்கு அறிவுறுத்து

தீயசக்திகளின் வதந்திகளையிட்டுப் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. வதந்திகளைப் பரப்பிவிடும் தீய சக்திகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கமும், பாதுகாப்புப் படைகளும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், சமூக அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்த முனையும் சக்திகளை ஒடுக்குவதிலும் பின் நிற்கப் போவதில்லை.

—இவ்வாறு பாதுகாப்பு அதிகாரிகள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (இ-5)

# முன் எப்போதுமே கண்டிராத தாக்குதல்

### பூநகரி குறித்து பொறுப்பதிகாரி

கொழும்பு, நவ. 21

பூநகரி முகாம் தாக்குதல் எனது இராணுவ சேவையில் முன் எப்போதுமே கண்டிராத ஒரு பெரிய தாக்குதல் ஆகும்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் பூநகரி முகாம் பொறுப்பதிகாரி கேர்ணல் ரஞ்சித் சில்வா ரூபவாஹினி செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் குரல் சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ 21

இன்று காலை மாவீரர் வார ஆரம்ப நிகழ்வான தேசிய கொடி ஏற்றல் வைபவம் நடைபெற உள்ளதை முன்னிட்டு புலிகளின் குரல் வானொலிச் சேவை தனது சேவையை நீடித்துள்ளது.

இன்று காலை 8.00 மணி முதல் 9.30 மணிவரை விசேட ஒலிபரப்பு ஒன்றை புலிகளின் குரல் வழங்க உள்ளது. (இ-9)

# விமான தளத்துக்கு புலிகளால் ஆபத்து

### 'ராவய' ஆசிரியர் கூறுகிறார்

லண்டன், நவ. 21

120 மி.மீ. பீரங்கிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றி இருப்பதை அடுத்து யுத்த நிலைமை அங்கு பூரணமாகப் புதிய பரிமாணம் அடைந்துள்ளது. பலாலி விமானத் தளத்தில் தரையிறங்கும் விமானங்களை அந்த பீரங்கியால் தூரத்தில் இருந்து கொண்டே தாக்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் மேற்கண்டவாறு பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இப்போது ஏற்பட்டுள்ள இந்த நிலையை சமாளிப்பதாயின் படையினர் தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து யாழ்ப்பாணத்தின் மீது பாரிய தாக்குதலை நடத்தவேண்டும். ஆயினும் அதனால் ஏற்படும் பாரிய உயிர்ச் சேதங்களால் சர்வதேச ரீதியாக கண்டனங்கள் எழுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

முகாம்களைப் பாதுகாக்க மற்றைய வழி அவை அனைத்தையும் வடக்கில் இருந்து அகற்றுவதே. ஆனால் அதை தென்னிலங்கை மக்கள் விரும்பமாட்டார்கள். ஆகவே எஞ்சிய ஒரே வழி அரசியல் தீர்வே ஆகும்.

அரசு தற்போது கடைப்பிடிக்கும் யுத்தக் கொள்கையின் இறுதி விளைவு சிங்கள - தமிழ் - மக்களின் வெறுப்புக்கு ஆளாவதேயாகும்.

இவ்வாறு திரு. விக்டர் ஐவன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-6)

# ஹெலியிலிருந்து விழுந்த பொதிக்குள் பிஸ்கட்

யாழ்ப்பாணம், நவ. 21

ஹெலிக்கொப்டரிலிருந்து விழுந்த பொதியைக் கண்டு அஞ்சி ஓடிய மக்கள் சிறிது நேரத்தின் பின்னர் அதற்கு அருகில் சென்று பிரித்துப் பார்த்தனர்.

அந்தப் பொதிக்குள் இராணுவத்தினருக்கு விலாசமிடப்பட்ட கடிதங்களும், பிஸ்கட் வகைகளும் இருக்கக் காணப்பட்டன.

இச்சம்பவம் குறித்து அறியப்படுவதாவது:-

வசாவிளான் புட்டியப்புலம் தோட்ட வெளிப்பகுதியில் நேற்று முன்தினம் காலை ஹெலி ஒன்று பறந்து கொண்டிருந்தது. அப்போது அதிலிருந்து ஒரு பொருள் விழுவதைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் கண்டனர். விமானப் படையினர் எறி குண்டு வீசுவதாக நினைத்த அவர்கள் அச்சத்தினால் தூரத்துக்கு ஓடினர். ஹெலி அப்பால் சென்றும் குண்டு வெடிக்கும் சத்தம் எதுவும் கேட்கவில்லை. விழுந்த பொருள் எதுவாக இருக்கும் என்று அறியும் ஆர்வத்துடன் அவர்கள் மெதுமெதுவாக அதற்குச் சமீபமாகச் சென்றனர்.

சற்றுத் தொலைவில் இருந்து பார்த்த போது அது உரப் பையில் கட்டப்பட்ட பொதி என்பது தெரிந்தது. அதன் பின்னர் பொதிக்குச் சமீபமாக நின்று நீளமான தடிகளைக் கொண்டு தட்டிப்பார்த்தனர். அப்போதும் அது வெடிக்கவில்லை.

பொதியில் குண்டு எதுவும் இல்லை என்று தெரிந்து கொண்டு விவசாயிகள் உரப் பை பொதியைப் பிரித்துப் பார்த்தனர்.

அதற்குள் பிஸ்கட் பெட்டிகள் பலவும், இராணுவத்தினருக்கு விலாசமிடப்பட்ட கடிதங்களும் இருக்கக் காணப்பட்டன.

அந்தப் பொதியைச் சம்பந்தப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர். (அ-15)

# மாவீரர் நினைவு வார நிகழ்வுகள் இன்று எழுச்சியுடன் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், நவ. 21

மாவீரர் நினைவு வார நிகழ்வுகள் இன்று தமிழீழம் எங்கும் மிக எழுச்சியுடன் ஆரம்பமாகின்றன.

குடாநாட்டில் மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடிகளின் அலங்காரங்களும்—

காற்றில் படபடக்கும் மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடிகளும் பதாகைகளும் வீதிகளுக்கு எழிலூட்டுகின்றன.

அலங்கார வளைவுகளும், பந்தல்களும், கொட்டகைகளும் எங்கும் அமைக்கப்பட்டுள்ளன.

கொட்டகைகளின் உள் பக்கத்தில் மேலிருந்து கீழ்வரை பார்க்கும் வகையில் படிப்படியாக மேடை அமைப்புச் செய்து மாவீரரின் படங்கள் வரிசையாக வைத்து அலங்கரிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றிலும் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சியில் முக்கிய சந்திகளும் கண்டி வீதியும் எழிற்கோலம் பூண்டுள்ளன.

சாவகச்சேரி பேருந்து நிலைய முன்றிலிலும் சங்கத்தானை, மீசாலை போன்ற இடங்களிலும் சிவப்பு, மஞ்சள் வர்ண அலங்காரம் செய்யப்பட்ட வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன, பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகரில் மாவீரர்களின் உருவப்படங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி முரளி



இது எல்லாம் காலம் பிந்திய ஞானம் பாருங்கோ......!

# புக்காரா வட்டமிட்டது

யாழ்ப்பாணம், நவ. 21

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை, அளவெட்டிப் பகுதிகளை உள்ளடக்கி நேற்று பிற்பகல் புக்காரா விமானம் ஒன்று பல தடவை வட்டமிட்டுச் சென்றது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிமக்கள் பதட்ட நிலையில் காணப்பட்டனர். (இ-15)

# குண்டு வீச்சுத் தாக்குதல்கள் வடக்கிலே அதிகரிக்கலாம்

கொழும்பு, நவ. 21

ஸ்ரீலங்கா விமானப் படை தனது குண்டு வீச்சுத் தாக்குதல்களை வட பகுதியில் மேலும் அதிகரிக்கும் சாத்தியம் இருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானத் தாக்குதல்கள் தொடரும் அறிகுறிகள் உண்டென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பு மூலம் பின்னடைவைச் சந்தித்திருக்கும் இராணுவம் தனது வீரர்களுக்குப் புதிய தென்பை ஏற்படுத்த புதிய வெற்றி ஒன்றைப் பெற்றாக வேண்டும் எனும் நிலையில் இருக்கிறது. எனவே வரும் நாட்களில் இராணுவத்தின் பாரிய தாக்குதல்களை வடக்கு - கிழக்கில் எதிர்பார்க்கலாம். —

விடுதலைப் புலிகளால் விமானத் தாக்குதலுக்குப் பதில் தர இயலாது என்பதால், யாழ்ப்பாணத்தில் தற்போது குண்டு வீச்சில் ஈடுபட்டது போலவே இனி வரும் நாட்களிலும் அதிகமாக விமானப்படை மூலம் அதிக தாக்குதலில் ஈடுபட வாய்ப்புண்டு —

அல்லது பலரும் எதிர்பார்ப்பது போல அடுத்த வருட ஆரம்பத்தில் வட மாகாணத்தின் மீது தனது இறுதித் தாக்குதலை மிகத் தீவிரமாக நடத்த இராணுவம் புதிய உத்திகளுடன் திட்டமிடவும் கூடும் — என்றும் அச் செய்திகள் தெரிவித்தன. (அ-5)

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

# அரசமைப்பை திருத்துவதற்கு சுதந்திரக் கட்சி உதவுமாம்

### தர்மசிறி சேனநாயக்க கூறுகிறார்

கொழும்பு, நவ. 21

தமிழர் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக்காண நேர்மையாக முயல்வதாக அரசு காட்டும் என்றால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனது கட்சி அரசியலை ஒதுக்கிவிட்டு அரசமைப்பில் திருத்தம் கொண்டு வருவதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பதற்கு உதவத் தயாராக இருக்கிறது.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஏற்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் ஐக்கிய தேசியக் கட்சி யோசனை எதனையும் தெரிவிக்கவில்லை என்றும் —

அப்படியான ஐக்கிய தேசியக் கட்சியை நம்ப முடியுமா என்றும் அவர் கேட்டார்.

அரசு தனது யோசனையைத் தெரிவித்திருந்தால் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இனப்பிரச்சினையை தேசிய பிரச்சினையாகக் கருதி தீர்வு [illegible] கலாம் என்றும் அவர் கூறினார். (இ-5-6)

# மட்டக்களப்பில் அப்பாவித் தமிழர் கைதாவது தினமும் அதிகரிப்பு

### பலர் விடுவிக்கப்படுவதில்லை

மட்டக்களப்பு பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் தேசவிரோதிகளும் மக்களைக் கைது செய்வது அதிகரித்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

திடீரென கிராமங்களை சுற்றி வளைக்கும் படையினரும், தேசவிரோதிகளும் அப்பாவிகளை கைது செய்து இராணுவ முகாம்களுக்கு [illegible] சித்திரவதைகளுக்கு அவர்களை உள்ளாக்குவதாகவும் —

இவ்வாறு கைது செய்யப்படும் பலர் விடுதலை செய்யப்படுவதில்லை என்றும் — சொல்லப்படுகிறது.

கடந்த 17 ஆம் திகதி கன்னன் குடா, மௌன தீவு ஆகிய பகுதிகள் அதிகாலை 4-00 மணியளவில் சுற்றி வளைக்கப்பட்டன.

பொலீஸாரும், இராணுவத்தினரும், தேசவிரோதிகளும் தேடுதல்களை மேற்கொண்டனர். 11 பேர் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் 3 பேர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை கன்னன் குடா வாசிகளான நேமிநாதன், தங்கேஸ்வரன், திருமால் ஆகியோரே விடுதலை செய்யப்படாதவர்களாவர்.

இதேபோல் கடந்த 14 ஆம் 16 ஆம் திகதிகளில் பாவற்கொடிச் சேனை கண்ணகி நகரினை திடீரென சுற்றி வளைத்த இராணுவத்தினர் ஒரு மாணவன் உட்பட 3 பேரைக் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர். இவர்களும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

சித்திரர் தெய்வநாயம் பிள்ளை (34 வயது), சிவசம்புஜெயா (11 வயது), மணியம் (46 வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்ப'த்திரி மீதான தாக்குதல் அமைச்சருக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். போதனா வைத்திய சாலை பாதுகாப்பு வலயத்தினுள் கடந்த 13 திகதி விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல் குறித்து வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி க. நவமலர் சுகாதார மகளிர் விவகார அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து அமைச்சர் ரேணுகா ஹேரத்திற்கு விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி சுற்றாடல் பகுதி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தியிருந்தும் அந்தப் பகுதியில் 'சுப்பசொனிக்' விமானங்கள் தாக்குதல் நடத்தி இருப்பதாகவும்—

இதனால் ஆஸ்பத்திரியில் சில பகுதிகள் சேதமடைந்துள்ள அதேவேளை, நோயாளர்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகினர் எனவும் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் குண்டுத் தாக்குதலில் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த இரு பாதுகாப்பு ஊழியர்கள் காயமடைந்தனர் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளது.

# காசநோய் சிகிச்சைப் பிரிவு கோப்பாயில் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 21

சங்கானை வைத்தியசாலையில் இதுவரை காலமும் இயங்கி வந்த மயிலிட்டி காசநோய்ச் சிகிச்சை விடுதிகள் கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்படவுள்ளன.

இராணுவ நடவடிக்கை காரணமாக இச்சிகிச்சைப் பிரிவு சில காலமாக இடவசதியற்று இயங்க முடியாமல் இருந்தது. நோயாளிகளின் கஷ்டமான நிலையை கருத்தில் கொண்டு கடந்த சில மாதங்களாக இப்பிரிவு சங்கானை வைத்தியசாலையில் இயங்க வைக்கப்பட்டது.

தற்பொழுது அங்கு இடவசதி பற்றாக்குறை காரணமாக இப்பிரிவை கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு மாற்ற முடிவாகியுள்ளது.

யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு தலைமைக் காரியாலயம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

# யூரியாவுக்கு விதித்தது போல் சிறுநீருக்கும் தடை வருமா?

வட பகுதிக்கு யூரியா கொண்டு செல்வதை அரசு தடை செய்துள்ளது அல்லவா? இது பற்றி ''த ஐலண்ட்'' தினசரியில் வாசகர் கடிதம் ஒன்று வெளியாகியிருக்கிறது.


சிறுநீரில் யூரியா இருக்கிறது என்று டாக்டர்கள் கூறுகிறார்கள்.

அப்படியானால் அரசு ஏன் யாழ்ப்பாணத்தில் ஆடு, மாடுகள், கால் நடைகள், மனிதர் சிறுநீர் கழிப்பதைத் தடை செய்யவில்லை? என்று அந்தக் கடிதத்தில் வினாவப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூரில் சீனர்கள் தமது சிறுநீரை பெரிய ஜாடிகளில் சேர்த்து வைத்து ஒரு வாரத்துக்குப் பின் மரக்கறிப் பயிர்களுக்குப் பாவிக்கிறார்கள். இதனால் மரக்கறிப் பயிர்கள் செழிப்பாக வளர்கின்றன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கனடாவிலிருந்து வாசகர் ஒருவர் இக்கடிதத்தை எழுதியிருக்கிறார். (உ-க)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**வல்லிபுரம் கனகசபை நல்லையா**

(V. K. நல்லையா)

(முன்னாள் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி ஆசிரியர், கொழும்பு அரசகரும மொழித் திணைக்கள (தமிழ்) பிரதம பதிப்பாசிரியர், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர், முல்லைத்தீவு மாவட்ட கல்விப்பணிப்பாளரும்)

பூவுலகில்: 12 - 11 - 1926

பொன்னுலகில்; 24 - 10 - 1993

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவின் போது வருகைதந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பல வகைகளிலும் உதவிகளும் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் இல்லத்தில் நாளை 22 - 11 - 1993 திங்கட்கிழமை அதிகாலையில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், நண்பகல் நடைபெற இருக்கும் சபிண்டீகரண கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி ந. அவையாம்பிகை,
மைத்துனர் ச. நடராசா மற்றும்
குடும்ப அங்கத்தவர்கள்.

இந்து பாடசாலைத் தெரு,
வல்வெட்டி.

(28098)


உலக வங்கியின் மாநாட்டுக்கு

# பாஸ்கரலிங்கத்தை அனுப்பி கரிபூசிக் கொண்டது அரசு!

கொழும்பு, நவ 21

வாஷிங்டனில் அண்மையில் நடந்து முடிந்த உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ள ராஜதந்திர நடைமுறைகளுக்கு மாறாக நிதி அமைச்சுச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கத்தை இலங்கை அரசு அனுப்பி வைத்ததன் மூலம் சர்வதேச சமூகத்தில் தனக்குத்தானே முகத்தில் கரிபூசிக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் வங்கியின் 125 உறுப்பு நாடுகளின் சார்பில் அவற்றின் நிதி அமைச்சர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும் என்பது ஒழுங்கு முறையாகும்.

இதன்படி—124 நாடுகளின் நிதி அமைச்சர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இலங்கையின் சார்பில் மட்டும் நிதிஅமைச்சின் செயலாளர் கலந்து கொண்டார்.

இது இலங்கையை அந்த மாநாட்டில் ஏனைய நாட்டு நிதி அமைச்சர்கள் புறக்கணிக்க வழிவகுத்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்படியான உலக வங்கியின் உயர் மாநாடுகளில் ராஜதந்திர ஒழுங்கு நடைமுறை உன்னிப்பாகக் கவனிக்கப்படுவது வழக்கம் என்றும்—

நிதி அமைச்சர்கள் அல்லாத, தகுதி குறைந்த பதவி வகிப்பவர்கள் கலந்து கொள்ளும் பட்சத்தில் அவர்களுடன் பேசவே ஏனைய நிதி அமைச்சர்கள் மறுத்துவிடுவது வழக்கம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உலகிலேயே இலங்கையில் மட்டும் தான் நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் நிதி அமைச்சர் பதவியையும் வகித்து வருகிறார். (த-எ) (ஒ-17)

# ஆஸ்பத்திரி மீது குண்டு வீச்சு நலன்புரிச் சங்கம் கண்டனம்

தீபாவளித்தினத்தன்று யாழ். போதனா மருத்துவ மனையின் பிரதான வாயிலுக்கு மிக அருகில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலயத்துக்குள் அரசுக்குச் சொந்தமான சுப்பர் சொனிக் விமானங்கள் பேரழிவை ஏற்படுத்தும் குண்டுகளை வீசி பெரும் அநர்த்தம் விளைவித்த செயலைக் கண்டித்து யாழ் அரசினர் பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச்சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

எமது மண்ணின் பல்வேறுபட்ட முனைகளிலிருந்தும் பலதரப்பட்ட நோய்களுக்கும். குண்டு வீச்சு, எறிகணை வீச்சு, துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கான சத்திர சிகிச்சைகளுக்கும், வெவ்வேறு மருத்துவ மனைகளிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காகவும் நோயாளர்கள் யாழ். போதனா மருத்துவமனையை நாடியே வரவேண்டியுள்ளமை தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

தீபாவளித்தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட இப்பாரிய குண்டு வீச்சானது யாழ். போதனா மருத்துவ மனையின் சிகிச்சைக் களங்களை மோசமாகப் பாதித்துள்ளது.

சிகிச்சை பெற வந்த நோயாளர்களையும், மகோன்னதமான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மருத்துவ மனைப் பணியாளர்களையும் மற்றும் பொதுமக்களையும் பீதியுறச்செய்துள்ளதுடன் பல்வேறு மட்டங்களில் உளவியல் ரீதியான பாதிப்புக்களையும் அது ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை அரச மருத்துவமனை மீதும், கிளிநொச்சி மாவட்ட அரச மருத்துவமனை மீதும் சுப்பசொனிக் விமானம் குண்டு வீச்சினை நடத்தியமையும், குழந்தை பிரசவித்த தாய் இறந்ததும், பெரும் எண்ணிக்கையில் நோயாளிகள் காயமடைந்த சம்பவங்களையும் எமது அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

நொந்து போயிருக்கும் நோயாளர்களது உள்ளங்களை வெந்து போகச் செய்யும் இவ்விதமான காட்டுமிராண்டித்தனமான, அநாகரிகமானபோக்கு உடன் நிறுத்தப்பட்டு நோயாளர்களது நலன்கள் பேணப் படுவதை உறுதிப்படுத்த ஆவன செய்ய வேண்டும்என எமது அமைப்பு சம்பந்தப்பட்ட அமைப்புக்களைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் வங்கி போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள எழுதுவினைஞர், தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் ஆகிய பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை ஒன்றை மக்கள் வங்கி நடத்த உள்ளது.

மேற்படி போட்டிப்பரீட்சையில் தோற்ற விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். பரீட்சார்த்திகளின் தகைமைகள் பற்றிய விவரம் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## முகாமைத்துவ பயிற்சி கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், நவ. 21

1993 ஆம் ஆண்டு பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஜூன் மாதங்களில் நடைபெற்ற முகாமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றி, அதற்கான கொடுப்பனவுகளை இதுவரையும் பெற்றுக் கொள்ளாத அதிபர்கள், பகுதித் தலைவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் முகாமைத்துவ நிலையத்தில் தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (த)

## முதுகலைமாணி பரீட்சையில் சித்தி

யாழ். பல்கலைக்கழக பொருளியல் முதுகலைமாணிப் பரீட்சையில் திரு. மா. சின்னத்தம்பி சித்தியடைந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை விரிவுரையாளரான திரு. மா. சின்னத்தம்பி இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்தியும் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கங்களும் பற்றிய ஆராய்ச்சிக்காக இப்பட்டத்தைப் பெறுகிறார்.

செல்வி யோகேஸ்வரி கந்தையா யாழ். பல்கலைக்கழக கல்வியியல் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். யாழ். இந்து மகளிர் கல்லூரியின் உப அதிபரான இவர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ''மழலையர் கல்வியின் இன்றைய நிலை'' என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார். (க)

தீவிரவாதத்தை ஒழிக்க

# எதிரணியினர் ஒத்துழைப்பு தந்தால் வரவேற்கப்படும்

## நாடாளுமன்றில் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

தீவிரவாதத்தை ஒழிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க எதிர்க்கட்சிகள் முன்வந்தால் அது மனமுவந்து வரவேற்கப்படும்.

அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா நாடாளுமன்றத்தில் கடந்த புதன் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி எம். பி. நெவில் பெர்னாண்டோ எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் தீவிரவாதத்தை முறியடிக்க அரசாங்கம் சகல வளங்களையும் திரட்டி முயற்சி செய்யுமா? அரசியல் வேறுபாடுகளை மறந்து இந்த முயற்சிக்கு உதவ சுதந்திரக்கட்சித் தலைவர் சிறிமாவுக்கு அரசு அழைப்பு விடுக்குமா? — என்று நெவில் பெர்னாண்டோ கேட்டிருந்தார்.

தீவிரவாதத்தை ஒழிக்கும் தேசிய முயற்சிக்கு சுதந்திரக் கட்சியை மட்டுமன்றி இந்த நாட்டில் உள்ள சகல ஜனநாயகக் குழுக்களையும் அரசாங்கம் இருகரங்கள் கூப்பி அழைக்கின்றது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தீவிரவாதத்தை முறியடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் அதே நேரத்தில் ஏனைய முயற்சிகளைக் கைவிட முடியாது என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

# கலைஞர்களுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் சுயசார்பு அடிப்படைத் தொழில் நுட்பப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கும், பழம்பெரும் கலைஞர்களைக் கௌரவித்தும் சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கும் வைபவம் நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பழம்பெரும் கலைஞர்களான புகைப்படக் கலைஞர் திரு. மா. பிலிப் நிக்கலஸ், ஓவியக் கலைஞர் திரு. பி. எஸ். மணியம், சிற்பக் கலைஞர் திரு. ஆ. ஜீவரத்தினம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள்.

இவர்களுக்கான றோட்டறிக் கழகத்தின் விருதும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் கழகத் தலைவர் திரு. செல்வநாதனால் வழங்கப்பட்டன.

கலைஞர்களைப் பாராட்டி மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, மில்க்வைற் அதிபர் திரு க. கனகராசா, வண. பிரான்சிஸ் யோசெப் அடிகளார் மற்றும் றோட்டறிக் கழக தொழில் சேவை இயக்குநர் திரு. க. குமாரதாசன், திரு. மணிவாசகர் ஆகியோரும் பேசினார்கள். (ஓ-111)

# பல்கலை. அனுமதிக்கான விண்ணப்பங்கள் வந்தன

யாழ்ப்பாணம், நவ. 21

1993/94 ஆம் கல்வியாண்டு பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களும், அனுமதி தொடர்பான கைநூல்களும் யாழ். பல்கலைக் கழகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

1992 ஆம் ஆண்டில் ஜீ. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே முறையில் குறைந்த பட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் [illegible] குப்பதுடன் அங்கீகரிக்கப் பட்ட நான்காவது பாடத்தில் 25 சதவீத புள்ளிகளுக்கு குறையாமலும், மொத்தப் புள்ளிகள் 180 க்குக் குறையாமலும் பெற்ற மாணவர்களே இப்பத்திரங்களைப் பெற தகுதியுடையவர்கள் என பல்கலைக் கழகப் பதிவாளர் தெரிவித்தார்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று பதிவாளர் தெரிவித்தார். (க-3)

# மாவீரர் எழுச்சி வாரம்; இன்றையவேலைதிட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 21

இன்று ஆரம்பமாகும் மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி வட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வேலைத் திட்டங்களில் இன்று மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு;

நல்லூர் வட்டம் — முற்பகல் 11-30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பு மூத்த நயினார் வீதி துப்புரவு செய்தல், பிற்பகல் 2-30 மணிக்கு கோண்டாவில் வடமேற்கு பாரதி வீதி துப்புரவு செய்தல், மயான பற்றை வெட்டுதல்.

யாழ். வட்டம் — காலை 10 மணிக்குகண்டிக்குளி காட்டுக் கந்தோர் வீதி துப்புரவு செய்தல்.

சண்டிலிப்பாய் வட்டம்— காலை 9மணிக்கு மாசியப்பிட்டி மற்றும் சண்டிலிப்பாய் மத்தி வெள்ளவாய்க்கால்கள் துப்புரவு செய்தல், நவாலி தெற்கு கமவீதி துப்புரவு செய்தல்.

சங்கானை வட்டம்—காலை 9மணிக்கு சங்கானை மத்தி விளாவெளி மயானம் துப்புரவு செய்தல், சங்கானை கிழக்கு மற்றும் தெற்கில் மரநடுகை. (த)

மாவீரர் வாரம்

# கோட்ட ரீதியாக இன்று நடக்கும் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 21

இன்று ஆரம்பமாகும் மாவீரர் வாரத்தில் கோட்ட ரீதியாக தினமும் கூட்டங்களும் நடைபெறவுள்ளன,

யாழ். மாவட்டத்தில் நான்கு கோட்டங்களிலும் உள்ள வட்டவை பிரிவுகளில் இன்று ஞாயிறு கூட்டங்கள் நடைபெறவுள்ள இடங்களும் நேரங்களும் வருமாறு:-

★ வலிகாமம் — சண்டிலிப்பாய் வட்டத்தில் இரட்டையப்புலம் வைரவர் கோவிலடியிலும் நல்லூர் வட்டத்தில் கொக்குவில் 'நாமகள் வித்தியாசாலையிலும் — யாழ். வட்டத்தில் வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியிலும் இரவு 7.30 மணிக்கு.

★ தென்மராட்சியில் — பளை வட்டத்தில் இத்தாவில் அ. த. க. பாடசாலையில் இரவு 8 மணிக்கு.

★ வடமராட்சியில்— பருத்தித்துறை வட்டத்தில்புலோலி கிழக்கு சிவன் கோவில் முன்றிலில் இரவு 7 மணிக்கு.

★ தீவகக் கோட்டத்தில் — கிளாலிபண்டிதர் குடியிருப்பில் இரவு 7.30 மணிக்கு.

கடற்புலிகள்

யாழ். மாவட்ட கடற்புலிகளின் ஏற்பாட்டில் வடமராட்சி வடக்கில் வல்வெட்டித்துறைச் சந்திக்கு அருகில் இன்று இரவு 7 மணிக்கு கூட்டம் நடைபெறும். (இ-5)

# 3 ஆம் ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது

யாழ்ப்பாணம், நவ. 21

புலிகளின் குரல் வானொலி 3 ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாசாலையில் நேற்று மாலை 3 மணிக்கு நிதர்சனப் பொறுப்பாளர் ஜவான் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரம்ம ஸ்ரீ வீரமணி ஐயர் மங்கள விளக்கேற்றி ஆசியுரை வழங்கினார்.

திரு. விஸ்வலிங்கம் வரவேற்புரையை நிகழ்த்த திரு. சண்புமுகதாஸ் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் சிறப்புரை வழங்கினர்.

3 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கலைபண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் சேரலாதன் பரிசுகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ-111 15)

# வினாத்தாள் வராததால் பரீட்சை நடக்கவில்லை

நேற்று நடைபெறவிருந்த எழுதுநர் தரம் ஒன்று பதவி உயர்வுப் பரீட்சை நடைபெறவில்லை.

வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து இங்கு வந்து சேராததே இதற்குக்காரணம்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சையில் 150 க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்ற இருந்தனர். (இ-5)

# மண் பரிசோதனைக்கு லண்டனிலிருந்து உபகரணம்

யாழ்ப்பாணம், நவ. 21

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பலபகுதிகளில் மண் பரிசோதனைகளை மேற்கொள்ள லண்டனில் இருந்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றன.

கிளிநொச்சியில் இயங்கும் யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் மண்பரிசோதனையை மேற்கொள்ள உள்ளது

மண் பரிசோதனைக்காக ஒருதொகுதி உபகரணங்கள் வந்துசேர்ந்துவிட்டன என்றும் —

ஏனைய உபகரணங்கள் லண்டனில் இருந்து வந்து சேர உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நாளை

நல்லூரில் இயங்கும் நவ உதயம்நிறுவனத்தில் தொழில் பயிலுநருக்கான கருத்தரங்கு ஒன்று நாளை திங்கள் காலை 9-30 மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெறும்.

கருத்தரங்கில் ''உழைப்பும் நிர்வாகமும்'' என்ற பொருளில் பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் கருத்துரை வழங்குவார். (த)

★ ★ ★

புனித ஸ்தல யாத்திரைக்குப் பின் நாடு திரும்பியுள்ள ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகளுக்கு, அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினர் ஏற்பாடு செய்துள்ள வரவேற்பு விழா நாளை திங்கள் பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான, 1993 ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தினப் போட்டிகள் நாளையும் நாளை மறு தினமும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும் என்று யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்: (த)


## O/L பரீட்சைக்கு

தயாராகும் மாணவர்களுக்காக

கணிதம்
விஞ்ஞானம்
தமிழ்
சமூகக்கல்வி
ஆங்கிலம்
சமயம்
வர்த்தகம்
விவசாயம்
மனைப் பொருளியல்
சித்திரம்
நடனம்
சங்கீதம்

ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**BOND**
**கல்வி நிறுவனம்**
யாழ்ப்பாணம்.
(28130)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரிக உலகின் 'கறை' அகற்றும் கறுப்பு- வெள்ளைக் கரங்கள்!

40 ஆண்டுகளுக்கு முன்னர்—

தென் ஆபிரிக்காவை நாகரிக உலகின் ஒரு 'கரும்புள்ளி' ஆக மாற்றியவர் ஹென்றிக் வேர்வோர்ட்.

தென் ஆபிரிக்காவின் பிரதமராக அவர் பணிபுரிந்த போதுதான் பெரும்பான்மை கறுப்பு இன மக்களை அடக்கி ஆளும் சிறுபான்மை வெள்ளை இன ஆட்சி முழு அளவில் தலை எடுத்தது. அவரால் கறுப்பு இனத்தலைவர் நெல்சன் மண்டேலாவும் சிறை வைக்கப்பட்டார்.

அவர்தான் நிறவேற்றுமைக் கொள்கையின் சிற்பி எனக் கருதப்பட்டார்.

40 ஆண்டுகளின் பின்னர்— அவரின் பேரன்— 29 வயதான வில்ஹெல்ம் வேர்வோட் கூறுகின்றார்—

> தென் ஆபிரிக்காவில் கறுப்பின ஆட்சி ஏற்பட வழிவகுக்கும் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதில் வெள்ளை மற்றும் கறுப்பு இனத் தலைவர்கள் வெற்றி கண்டுள்ளனர். இதன் மூலம் உலகின் "கறை" யாக இருந்த நிறவேற்றுமை ஒழிக்கப்படுகிறது.

''சிற்பியின் பேரன் என்பதிலும் பார்க்க இன்றைய புதிய தலைமுறையின் அடையாளமாக நான் எழுந்து நிற்கின்றேன். நாட்டில் ஜனநாயகம் ஏற்பட குரல் கொடுக்கின்றேன்''—

கறுப்பு இன மக்களின் விடுதலைப் போராட்டத்தை நடத்தி வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் பொதுக் கூட்டம் ஒன்றில் கடந்த மாதம் பேரன் கலந்து கொண்டு இப்படி பேசியது, நிறவேற்றுமை பற்றிய வெள்ளை இனத்தவரின் மனமாற்றத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.

2கோடி 70 லட்சம் கறுப்பு இன மக்களின் ஆட்சி தென் ஆபிரிக்காவில் அடுத்த ஆண்டு ஏற்படும் போது, அவர்களுடன் இணைந்து வாழ 30 லட்சம் வெள்ளையர்கள் தயாராகி வருகின்றார்கள் என்பதையும் இது புலப்படுத்துகின்றது.

கறுப்பு இன விடுதலைப் போராட்டத்தை நடத்திவந்தவர் நெல்சன் மண்டேலா.

25 ஆண்டுகளுக்கு மேலாக வெள்ளை இன ஆட்சியினால் சிறையிலிடப்பட்ட மண்டேலாவை 1990இல் தற்போதைய ஜனாதிபதி டி கிளேர்க் விடுதலை செய்தார். அன்று ஏற்பட்ட இந்த மனமாற்றம்— கடந்த மூன்று வருடங்களாக கறுப்பு மற்றும் வெள்ளை இனத் தலைவர்களுக்கு இடையே நடந்த பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதில் முடிந்தது.

22 கட்சிகளின் தலைவர்கள்

## புதிய தென் ஆபிரிக்கா உதயமாகிறது!

கடந்த வாரம் ஜோஹன்னஸ் பேர்க் நகரில் நடந்த வைபவம் ஒன்றில் இது தொடர்பான ஆவணத்தில் கையெழுத்திட்டனர்.

### புதிய இடைக்கால அரசமைப்பு

ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் ஜனநாயக ஆட்சி ஒன்றை நிறுவ வழி வகுக்கும் புதிய அரசமைப்பு ஒன்றை கறுப்பு மற்றும் வெள்ளை இனங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வெற்றிகரமாகத் தயாரித்து உள்ளனர்.

இதன்படி—பெரும்பான்மையாக வாழும் கறுப்பு இன மக்களின் ஆட்சி தென் ஆபிரிக்காவில் ஏற்படவுள்ளது. இன்னும் சில வாரங்களில் புதிய இடைக்கால அரசமைப்பு நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெறவிருக்கின்றது.

பின்னர் புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்யும் தேர்தலை அடுத்த ஆண்டு ஏப்ரல் 27ஆம் திகதி நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்படுவதை தொடர்ந்து இடைக்கால நிறைவேற்றுக்கவுன்ஸில் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு இயங்கும் இக் கவுன்ஸில் அரசுடனும் அமைச்சரவையுடன் இணைந்தே செயற்படும்.

சிறுபான்மை இனவெள்ளை இனத்தவரின் உரிமைகளைப் பாதுகாக்கும் அம்சமும் புதிய அரசமைப்பில் இடம்பெறவுள்ளது.

ஏப்ரல் தேர்தலில் 5 சதவீத வாக்குகளுக்கு மேல் பெறும் அனைத்து அரசியல் கட்சிகளும் இடைக்கால கவுன்ஸிலில் பிரதிநிதித்துவம் பெறும்.

**தீபன்ராஜா**

தேர்தலில் கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றும் கட்சியே புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யவும் புதிய இடைக்கால அரசமைப்பு இடமளிக்கின்றது. இதன்படி பெரும்பாலும் நெல்சன் மண்டேலாவே புதியஜனாதிபதியாக வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

### தாயகங்கள் ஒன்று சேர்ப்பு

புதிய இடைக்கால அரசமைப்பில் இன்னொரு முக்கிய அம்சமும் இடம்பெற்றுள்ளது.

நிறவேற்றுமையை அஸ்திவாரமாகக் கொண்டு சிறுபான்மை வெள்ளை இன ஆட்சி ஏற்படுத்தப்பட்ட போது, பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடித்து, பெரும்பான்மையான கறுப்பு இன மக்களின் ஒற்றுமையை அவர்கள் பலவீனப்படுத்தினார்கள்.

கறுப்பு இன மக்களில் பல பிரிவினர் உள்ளனர். அவர்களைத் தாங்கள் தங்கள் பகுதிகளில் ஆட்சிநடத்த வெள்ளை இன ஆட்சி அனுமதித்தது. ஒவ்வொரு பழங்குடியும் வாழும் பிரதேசத்தை அவர்களின் தாயகமாக வெள்ளை இன ஆட்சி அனுமதித்தது.

கறுப்பு இனத்தவர்கள் மத்தியில் இது போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தியது. அவர்கள் நிறத்தால் ஒன்றுபடுவதை இது தடுத்தது. இந்தப் பிரித்தாளும் கொள்கை தென் ஆபிரிக்காவை முழுமையாக ஆளும் வாய்ப்பை வெள்ளை இனத்தவருக்குக் கொடுத்தது.

புதிய இடைக்கால அரசமைப்பு, சகல பழங்குடிகளின் தாயகங்களையும்ஒன்று சேர்க்க வழி வகுத்துள்ளது. சகல கறுப்பு இன மக்களின் தாயகமும் இனி தென் ஆபிரிக்காவே என்பதுதான் இதன் அர்த்தமாகிறது.

### புதிய தென்ஆபிரிக்கா

வைரச் சுரங்கங்களும் தங்கச் சுரங்கங்களும் நிறைந்த தென்ஆபிரிக்கா புதிய அரசமைப்பின் கீழ் எப்படி வளர்ச்சி காணப்போகிறது?

இதற்கு விடை தரவேண்டிய பொறுப்பு கறுப்புஇனத் தலைவர்கள் கைக்கு தற்போது மாற்றப்படுகிறது.

3 கோடி 80 லட்சம் மக்களில் 15 சதவீதமான 70 லட்சம் கறுப்பர்கள் நகரப்புற சேரிகளில் வாழ்கின்றனர். வறுமையில் வாழும் இவர்களின் வாழ்வைச் செழிப்பாக்கக்கூடிய பொருளாதார முன்னேற்றத்தை இரவோடிரவாக செய்யக்கூடிய வல்லமை மண்டேலா தலைமையிலான புதிய அரசு பெறுமா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

ஏழைக்கறுப்பர்கள் தீவிரவாதத்தில் இறங்குவதை தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் உடன்பாடு பெரும்பாலும் தணித்துவிடும் என்றே கறுப்பர்களின் தலைவர்கள் நம்புகின்றனர்.

1976 இல் சுவட்டோ எழுச்சி என்று அழைக்கப்படும் கறுப்பர்களின் கிளர்ச்சி ஆரம்பமானதைத்தொடர்ந்து கறுப்புஇன மாணவர்களின் கல்வி வளர்ச்சி ஸ்தம்பித்தது. 60 லட்சத்துக்கு அதிகமான கறுப்பு இன மாணவர்களில் பெரும்பாலோர் கல்வியை கைவிட்டனர்.

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது.

இவையெல்லாம் மண்டேலா தலைமையில் அமை

(5 ஆம் பக்கம் பார்க்க)

---

ஆபிரிக்கக் கண்டத்தின் தென்முனையில் உள்ளது தென் ஆபிரிக்கா.

தெற்கு மற்றும் கிழக்கு எல்லையாக இந்துமா கடலும், மேற்கு எல்லையாக அத்திலாந்திக் கடலும் அமைந்துள்ளன.

வடக்கு எல்லைகளாக கறுப்பு இன நாடுகளான சுவாஸிலாந்து, மொஸாம்பிக், ஸிம்பாப்வே, பொட்ஸ்வானா மற்றும் நமீபியா உள்ளன.

விஸ்தீரணம்: 4 லட்சத்து 71 ஆயிரத்து 445 சதுர மைல்.

ஜனத்தொகை: 3 கோடி 79 லட்சத்து 84 ஆயிரம். இவர்களில் 68.2 சதவீதமானோர் கறுப்பு நிறத்தவர்கள்.

கறுப்பு இன மக்களில் பல பிரிவினர் உள்ளனர். அவையாவன: ஸுலு – 23.7 %, வடஸோதோ–9.8%, ஷோஸா – 9.7 %, தென்ஸோதோ – 7.3 %, ட்ஸவானா - 5.7 %, ஏனையோர் – 12 %.

வெள்ளை இனத்தவர் — 18 %, கலப்பு நிறத்தவர் — 10 %, ஆசிய நாட்டவர் — 3.3 %.

உத்தியோக மொழிகள் — ஆங்கிலம், ஆபிரிக்கனர்.

மதங்கள் — உத்தியோகமதம் என ஒன்று அங்கு இல்லையாயினும் 20.4 சதவீதத்தினர் பழங்குடியினரின் மதத்தைப் பின்பற்றி வருகின்றனர். ரோமன் கத்தோலிக்கர் — 6.5 %, அங்கிலிக்கன் — 6.5 %, மெதடிஸ்ட் – 8.5 %, 36 சதவீதத்தினர் சிறிய மதப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

---

**சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

---

**மலர்தூவிப் புகழ் பாடுவோம்**

— எடுப்பு —

ஊரெல்லாம் மாவீரர் நினைவாலயம் - மக்கள்
உணர்வெல்லாம் ஒன்றிக்கும் உயிராலயம்
போர்வென்ற பேர்சொல்லும் புகழாலயம்-வீரர்
பெருமையைப் பறைசாற்றும் திருவாலயம்
(ஊரெல்லாம்)

— முடிப்பு —

நாளெல்லாம் பூசிக்கும் ஆராதனை-எங்கள்
வாழ்வெல்லாம் நேசிக்கும் ஓர்சாதனை;
நேரல்லாம் தமிழீழம் நிகழ்சாதனை - தமிழர்
நிலமெல்லாம் சிலிர்க்கும்பேர் ஆராதனை
(ஊரெல்லாம்)

தலைவன்சொல் ஆணையிலே பகைவென்றவர் - அந்தத்
தலைவன்கண் நீர்மல்கத் துயில்கொண்டவர்;
மலைவந்த போதும்நின் றெதிர் சென்றவர்-இந்த
மறவர்க்குச் செலுத்துவோம் நினைவஞ்சலி
(ஊரெல்லாம்)

வாருங்கள் மலர்தூவிப் புகழ்பாடுவோம்-வந்து
சேருங்கள் துணிவோடு களமாடுவோம்
நாடெங்கள் தமிழீழம் மீட்டாடுவோம்-சொந்த
வீடெங்கும் விடுதலைக் கூத்தாடுவோம்
(ஊரெல்லாம்)

**- முருகனடியான்**

---

# தெற்கு ஆசியாவின் அரசியலில் பழிவாங்கும் பாஞ்சாலிகள்

பாரதத்தின் பாஞ்சாலி சபதம் பலரும் அறிந்த விடயம்.

''பாவி துர்சாதனன் செந்நீர் — அந்தப்
பாழ்த்துரியோதனன் ஆக்கை இரத்தம்
மேனி இரண்டும் கலந்து - குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான் — இது
செய்யு முன்னே முடியேன்'' என்றுரைத்தார்

— பாஞ்சாலி சபதம் பலிக்க 16 ஆண்டுகள் எடுத்தன.

கணவன் கோவலன் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டதை அறிந்து கண்ணகி மதுரை மாநகரத்தையே எரித்தாள்.

பெண்களின் ஆத்திரமும் பழிவாங்கும் சக்தியும் பலமானவை.

பாஞ்சாலியும் கண்ணகியும் மட்டுமா பழிவாங்கினார்கள்.

இன்று தென் ஆசியாவின் அரசியலில் பழிவாங்கும் பாஞ்சாலிகள் மலிந்திருக்கின்றனர்.

### பூட்டோ மகள் பெனாஸிர்

இவர்களில் முதன்மையானவர் பாகிஸ்தானின் புதிய பிரதமரான பெனாஸிர் பூட்டோ



பெனாஸிர் பூட்டோ

ஆவார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் பெனாஸிரின் [illegible] பூட்டோவை தூக்கிலிட்டுக் கொலை செய்தார்.

மகள் பெனாஸிர் பழிவாங்கக் காத்திருந்தார். ஆனால்



சிறிமா

ஸியா-உல்-ஹக் அவரின் கைக்கு அகப்படாமல் பதவியில் இருக்கும்போதே விமான விபத்தில் உயிரிழந்தார்.

ஸியா-உல்-ஹக் தப்பினாலும் பெனாஸிர் பழிவாங்க இன்றும் பலர் இருக்கிறார்கள்.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், பெனாஸிரின் கணவரான ஆசிவ் சர்தாரியைச் சிறையிலிட்டார்.

இதற்கு பெனாஸிர் கணக்கு முடிக்காமலா விடுவார்?

### ஸியாவின் மனைவி

பாகிஸ்தானிலிருந்து பிரிந்து புதிய நாடாக உதயமாகிய பங்களாதேஷின் கதையும் பழிவாங்கலைப் பொறுத்த வரையில் பாகிஸ்தானை ஒத்ததே.

இன்றைய பிரதமர் பேகம் காலிதா ஸியாவின் கணவர் ஜனாதிபதி ஸியா-உர்-ரஹ்மானின் ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்றின் போது படுகொலை செய்யப்பட்டார்.

கணவரின் படுகொலையை அடுத்தே மனைவி அரசியலில் புகுந்து தற்பொழுது பிரதமராகியுள்ளார்.

பங்களாதேஷின் எதிர்க்கட்சித்தலைவி ஷேக்ஹ செமாவாஜெத் தமது தந்தையாரான ஷேக் முஜிபுர் ரஹ்மானின் இல்லத்தையே தமது அலுவலகமாகக் கொண்டிருக்கிறார்.

பங்களாதேஷின் ஸ்தாபகரான ஷேக் முஜிபுர் ரஹ்மானைக் கொன்றவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதை மகள் முழுக்க முழுக்க எதிர்க்கின்றார்.

### சிறிமாவோ-சந்திரிகா

ஸ்ரீலங்காவில் தாய் சிறிமாவோ மகள் சந்திரிகா,



சோனியா காந்தி

இருவரும் தமது கணவன்மார்ன் படுகொலைக்குப் பின்னரே அரசியலில் புகுந்தார்கள் அவர்களின் அரசியல்

(5 ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:

**- பாரதிநேசன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள [நஷனல் பனசொனிக் Two in One டெக்செற்] J. V. C. 14'' கலர் ரீ. வி., 1 வருட நாம்பன் கன்று, மறி ஆடு, கடாய்க்குட்டி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. நாதன், 16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (28117)

முட்டை இட்டுக்கொண்டிருக்கும் நல்ல இன வான் கோழி, வெள்ளடியன், யாமாஸ்கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. எம், பாக்கியநாதன், மோகன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (28109)

இருபாலை பெரியகுளத்தடியில் பாதை, கிணற்றுடன் (வீடுகட்ட அல்லது தோட்டம் செய்ய உகந்தது) பதினொரு பரப்பு நிலமும் அத்துடன் சேர்ந்த ஒன்பது பரப்பு நெல் வயலும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சதாசிவம் பரமானந்தம், 'இந்து இல்லம்', இருபாலை றோட், கோப்பாய் தெற்கு. (28095)

நல்ல இன ஆட்டுக்கடாய் இரண்டு விற்பனைக்கு உண்டு. நிறம் கறுப்பு. தொடர்பு: நா. பாலன், No-56, பாண்டியந்தாழ்வு, கொழும்புத்துறை வீதி (கடை), சந்தன மாதாகோயில் முன்பாக. (28102)

## விண்ணப்பப்படிவம்

மக்கள் வங்கியில் எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கான விண்ணப்பப்படிவம் 2/-க்கு பெற்றுக்கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/6554)

## வீடு விற்பனைக்கு

37, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணையில் 4 பரப்பு காணியுடன் 4 அறை வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. ஜெயராஜா, 94, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை. (6814)

## பங்காளிகள் தேவை

யாழ். நகரில் பல்பொருள் களஞ்சியத்திற்கு ஆர்வமுள்ள பெண் பங்காளிகள் உடன் தேவை முழுவிவரங்களுக்கும் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். இ. ஸ்ரீகாந்தன், இல: 89, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (28100)

## மணமக்கள் தேவை

ஆண், செவ்வாய் குற்றமுள்ள 36 வயது T. Aக்கும், எக்கவுண்டனுக்கும், டெ... ரல் டாக்டருக்கும், குற்றமுள்ள 36 வயது பட்டதாரி ஆசிரியைக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், (28119)

## O/L கணிதம்

G.C.E. (O/L) 1993 பரீட்சையில் தோற்றும் மாணவருக்கான கணித பாட துரித மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன. க. ஜீவமோகன், 'ராணிமனை', அரசடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு. (6803)

# 118 பேருக்கு எய்ட்ஸ்

கொழும்பு, நவ. 21

நாட்டில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 118 பேர் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 20 பேர் வெளிநாட்டவர்கள் என்றும், எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 26 பேர் இறந்துள்ளனர் எனவும் மேக நோய்த் தடுப்பு வைத்திய பிரசாரப் பிரிவைச்சேர்ந்த வைத்திய நிபுணர் திருமதி சேனநாயக்கா தெரிவித்தார்.

இலங்கையில் எய்ட்ஸ் வைரசுக்கள் தொற்றி உள்ளவர்களின் எண்ணிக்கை தற்போது 4 ஆயிரமாக அதிகரித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

---

போதனைப் பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

# கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாடநெறிகளுக்கான விரிவுரைகள் **05 - 12 - 1993** இல் ஆரம்பமாகின்றன.

- கலைமாணி **B. A.**
- விஞ்ஞான மாணி **B. Sc.** (புள்ளி விவரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **02 — 12 — 1993**

விண்ணப்பப் படிவத்தினையும் விவரத் திரட்டினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ கடந்த 15 வருடங்களாக வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ். நகரில் இதுவே.

[சி-6505]

---

# பனை-தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

கோண்டாவில்

# பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி: **பொதுமுகாமையாளர்**

கல்வித் தகைமைகள்:

(அ) கூட்டுறவு பணியாளர் 8ஆவது சம்பளத் திட்டத்தில் சந்தைப்படுத்தல், மேற்பார்வையில் மூன்றுவருட அனுபவம்/கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத்திட்டத்தில் சந்தைப்படுத்தல், மேற்பார்வையில் ஆறு வருட அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தர சான்றிதழ்/ க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடத்துடன் நான்கு வருட அனுபவம்

சம்பளத் திட்டம்:

1305 — 60 X 4 — 75 X 11 — 2370

2. பதவி: **கணக்காளர்**

கல்வித் தகைமை:

(அ) கணக்குப்பதிவாளர், எண்பார்வை லிகிதர் பதவியில் மூன்று வருட அனுபவத்துடன் கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டம்/கணக்குப் பதிவாளர், எண்பார்வை லிகிதர் பதவியில் ஆறுவருட அனுபவத்துடன் கூட்டுறவு பணியாளர் 10ஆவது சம்பளத்திட்டம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தர சான்றிதழ்/ க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாட சித்தி கணக்கியல் உட்பட அத்துடன் நாலு வருட அனுபவம்.

சம்பளத் திட்டம்:

1165 — 60 X 3 — 75 X 11 — 2170

3 பதவி: **கிளை மேற்பார்வையாளர்**

கல்வித் தகைமை:

(அ) கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தர சான்றிதழ் / க. பொ. த. சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு பாட சித்தியும், இதில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் மூன்று வருட அனுபவம்.

சம்பளத் திட்டம்:

1005 — 40 X 5 — 50 X 20 — 1705

4. பதவி: **காவலாளி**

கல்வித் தகைமை:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்டத்தில் ஒரு வருட அனுபவம் / 8ஆம் வகுப்பு சித்தி.

சம்பளத் திட்டம்:

855 — 30 X 7 — 40 X 8 — 1385

மேற்கூறப்பட்ட சம்பளத்திட்டத்துடன் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 20 — 40 ற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

இப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் தனித்தனியாக பதிவுத்தபாலில் 30-11-1993ஆம் திகதி கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி;

தலைவர்,
கோண்டாவில் பனை தென்னை வள-
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
தாவடிச்சந்தி, கோண்டாவில்.

தலைவர்.

[சி-6378]

---

# ST. JOHN'S COLLEGE JAFFNA

1. ஆண்டு — 9
2. க. பொ. த. (உயர்தரம்) — ஆண்டு — 12, விஞ்ஞானம், வர்த்தகம்.

மேற் குறித்த இரு வகுப்புகளிற்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) விண்ணப்பப்படிவங்களை கல்லூரி காரியாலயத்தில் 29 - 11 - 1993 தொடக்கம் 03-12-1993 வரை பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 13-12-1993 ஆகும். விண்ணப்பப்படிவத்தில் பாடநெறி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்களை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் கல்லூரி காரியாலயத்தில் இருந்து காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை படிவமொன்றிற்கு ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

(ஈ) அனுமதிப் பரீட்சை;
காலம்: 20 - 12 - 1993
நேரம்: காலை 9மணி

(உ) ஆண்டு 9க்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிலும், க. பொ. த. (உ/த) ஆண்டு-12, விஞ்ஞானப் பிரிவுக்கு கணிதம், விஞ்ஞானத்திலும், வர்த்தகப் பிரிவிற்கு வர்த்தகம், சமூகக்கல்வியிலும் பரீட்சை நடைபெறும்.

— அதிபர்.

[சி-6374]

---

# பனை அபிவிருத்திச் சபை

# பதவி வெற்றிடம்

பனை அபிவிருத்திச் சபையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பொது முகாமையாளர்

தகைமைகள்:

(அ) பட்டப் பின் படிப்பு அல்லது வேளாண்மை விஞ்ஞானத்திலோ அன்றி உயிரியல் இரசாயனத்திலோ டிப்ளோமாவுடன் ஒரு விஞ்ஞானப் பட்டத்தைக் கொண்டிருப்பதோடு 10 வருட சிரேஷ்ட நிறைவேற்றும் தரத்தில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஆ) வயதெல்லை: **30 — 45** வரை

(இ) சம்பள அளவுத்திட்டம்:
95,400 — 10 X 3,000—125400/-

02. சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்

தகைமைகள்:

(அ) சந்தைப்படுத்தல்துறையில் 3 வருட அனுபவத்துடன் ஒரு பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) வயதெல்லை: **30 — 45** வரை

(இ) சம்பள அளவுத்திட்டம்:
46,740 — 10 X 1,560 — 62,340/-

அரச கூட்டுத்தாபன, சபை உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள/ஸ்தாபனத்தின் / சபையின் தலைவர்களினூடாக 15-12-1993 க்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-6371]

---

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 15 — 09 — 1921



மறைவு: 21 — 11 — 1990

## திருமதி செபஸ்தியம்மா போகரட்ணம் சந்திரப்பிள்ளை

ஆண்டுகள் மூன்றோடி மறைந்தாலும் அம்மா-உன்
அன்பான முகமெங்கள் அகத்திலே மறைவதில்லை
நீங்காத நினைவோடு நித்தம் நாம் யேசுவிடம்
நீர் மோட்சம் சேர்ந்துவிட நிறைவாக வேண்டுகிறோம்

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

466/2B, யுவானியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(28107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தேசியக் கடமை

அடுத்த சனிக்கிழமை வரவிருக்கும் மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழம் எங்கும் இன்று முதல் மாவீரர் வார நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.

ஈழத் தமிழர் வரலாற்றிலும் — ஏன் உலகில் உள்ள அனைத்துப் போராட்ட சக்திகளின் சரித்திரத்திலும் — புதிய அத்தியாயம் படைத்த மாவீரர்கள் எமது வேங்கைகள்.

மண்ணின் விடுதலைக்காக — மக்களின் விடிவுக்காக — தமிழினத்தின் உயர்வுக்காக — தமது உடலை தாயகத்துக்கு உரமாக்கிய எங்கள் இளம் தளிர்கள் இவர்கள்.

இளமையின் ஆசாபாசங்களையும் விருப்பு வெறுப்புகளையும் எமது இனத்தின் எதிர்காலச் சந்ததிக்காக துறந்து, தமிழ் மக்களின் விடுதலையையே தமது ஒரே இலட்சியமாக — கனவாக — வரித்துக் கொண்ட வேங்கைகள். சத்திய வேள்வியில் தம்மையே ஆகுதியாக்கிக் கொண்ட இளம் புலிகள்.

ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயம் படைத்தவர்கள் இந்த மாவீரர்கள்

இந்த உத்தமர்களின் தியாகத்தில் கட்டி எழுப்பப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று புதிய பரிமாணம் கண்டிருக்கிறது.

ஒரு சில போராளிகளின் உயிர்த் தியாகத்தோடு கொழுந்து விட்டெரியத் தொடங்கிய சத்தியப் போராட்டம் இன்று ஆறாயிரத்துக்கும் அதிகமான வேங்கைகளின் உயிர் அர்ப்பணிப்புகளால் கட்டி வளர்க்கப்பட்டு, பெரும் எரிமலையாக வெடித்திருக்கிறது.

தமிழ் மக்களை அடிமைப்படுத்த திட்டமிட்டு செயற்பட்டு வரும் ஆட்சியாளருக்கு பூநகரியில் கொடுக்கப்பட்ட அதிரடி ஒரு செய்தியைப் புரிய வைத்திருக்கிறது.

சுதந்திரத் தமிழ் ஈழம் அமையப் போவதை எந்த சக்தியாலும் இனி தடுத்து விட முடியாது என்பதே அந்தச் செய்தி.

அந்தச் செய்தியை உலகுக்கும் ஆட்சியாளர்களுக்கும் அறைந்து உரைப்பதற்காக — பெரும் எடுப்பில் ஒலிக்கச் செய்வதற்காக — தம் இன்னுயிரை தந்தவர்கள் இந்த மாவீரர்கள்.
உடன் பிறப்புகள்.

எண்ணிக்கையில் குறைந்த இனம் என்பதால் தமிழர்கள் அடிமைகளாக, குடிமைகளாக வாழமாட்டார்கள் என்பதை உலகுக்கு உணர்த்திய உத்தமர்கள்.

வாழ்ந்தால் சுதந்திர நாயகர்களாக வாழ்வோம்: இல்லையேல் களத்தில் மாவீரர்களாக வீழ்வோம் என்ற மறத் தமிழனின் மாண்பை வெளிப்படுத்திய வரலாற்று நாயகர்கள்.

அவர்களின் அர்ப்பணிப்புகளே இன்று உலக அரங்கில் தமிழனை தலை நிமிர வைத்திருக்கின்றன. எமது இனத்துக்கு என உலகில் ஒரு நாடு உருவாக அந்த அர்ப்பணிப்புகளே அடித்தளம் இட்டுக் கொடுத்திருக்கின்றன.

அத்தகைய மாவீரர்களின் நினைவுகளை, தியாகங்களை எமது சிந்தையில் நிறுத்தி அவர்களைப் போற்றி, அவர்கள் வழியைத் தொடர வேண்டியது இந்த சமூகத்தின் கடமை

அந்த மாவீரர்களின் சரிதங்களை, சாதனைகளை எமது மனத்திரையில் நிறுத்தி, அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதன் மூலம் இந்த மாவீரர் வாரம் தொடர்பான எமது தேசியக் கடமையை நிறைவேற்றுவோமாக!

மாவீரர்களின் தியாகங்கள் வீணாகிப் போகாமல் இருக்க தமிழ் மக்களைப் பெரும் தேசியக் கடமை காத்திருக்கிறது. மாவீரர்கள் வழியில் இந்த உரிமைப் போரைத் தொடர்வதே எம்முன் உள்ள ஒரே வழி. இந்த சமூகப் பொறுப்பை முழுமனதுடன் ஏற்று, மாவீரர்களின் கனவு நனவாக உழைப்போமாக.

# பூநகரித் தோல்வியை சாதகமாக்கி கொழும்பில் இராணுவப் புரட்சிவருமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பூநகரி வெற்றித் தாக்குதலை இம்மாதம் 11 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை நடத்தினார்கள். அடுத்த நாள் வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணியில் இருந்து வடமாகாணம் முழுவதிலும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த ஊரடங்குச் சட்டம் எப்போது நீக்கப்படும்? நீக்கப்படாமலே தொடர்ந்து நடைமுறையில் இருக்குமா என்பதே இப்போது பலரும் ஆவலுடன் கேட்கும் கேள்வியாகும்.

பூநகரிச் சண்டை மூன்று நாட்களில் முடிந்து விட்டது. அங்கிருந்த கடற்படை — இராணுவ கூட்டுத்தளத்தை முற்றாக நிர்மூலமாக்கிவிட்டு விடுதலைப் புலிகள் சனிக்கிழமை காலையில் அங்கிருந்து திரும்பினர் தமது தாக்குதலின் இலக்கைப் பூரணமாக அடைந்த நிலையில் இருபத்தைந்து கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஆயுதங்களையும் அவர்கள் அள்ளிக் கொண்டு வந்தனர்.

எதிரியின் முகாமுக்குள் சென்று அவன் பெருந்தொகைப் பணத்துக்குக் கொள்வனவு செய்து வைத்த ஆயுதங்களை எடுத்து வந்தே எதிரியுடன் போராடும் விடு

**அரசியல்**

தலைப் புலிகளின் மூலோபாயம் பிரசித்தமானது. ஆனால் பூநகரித் தாக்குதலில் அவர்கள் அள்ளி எடுத்த ஆயுதங்கள் கடந்த பத்து வருடங்களில் சாதனைக்குரியவை. அவை 2,000 ஆண்டு முடியும் வரை போராடுவதற்குப் போதுமானவை என்று உத்தேசமாகச் சொல்லப்படுகிறது.

ஆயுத வகையில் மட்டுமன்றி இராணுவத் தரப்பில் ஏற்படுத்தப்பட்ட ஆளணி இழப்பும் மிக உச்சமாகும். பூநகரி கூட்டுப்படைத் தளத்தைச் சேர்ந்த இரண்டாயிரம் பேரில், ஆகக் குறைந்தது 900 பேர் இறந்திருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் கிட்டத்தட்ட அதே அளவுக்கு வரலாம். இராணுவ ஆஸ்பத்திரியிலும், கோட்டே ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியிலும் மட்டும் 476 பேர் சிகிச்சை பெறுகின்றனர் என்பது அரசின் உத்தியோக பூர்வ அறிவிப்பு. அநுராதபுரம், பனாகொட, கொழும்பு பெரியாஸ்பத்திரி ஆகிய மூன்று ஆஸ்பத்திரிகளிலும் மேலும் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெறுவதாகவும் அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆயுத, ஆளணிப் பேரிழப்புகளுக்குப் பழிவாங்குவதற்காகவே வடமாகாணத்தில் ஊரடங்குச் சட்டம், தொடர்ந்து அமுல் செய்யப்படுகிறது. காரண காரியமின்றி நீடிக்கப்படுகிறது.

13ஆம் திகதி காலை விடுதலைப் புலிகள் திரும்பிய பின்னர், காயமடைந்த படையினரை மீட்பதற்கும், மாண்ட படையினரின் சடலங்களை எடுப்பதற்குமாக அரச விமானங்கள் ஓடித் திரிந்தன. கூட்டிக்கழித்து அதற்காக மூன்று நாட்களை ஒதுக்கினாலும் 15ஆம் திகதி திங்கட்கிழமைக்குப் பின்னரும் ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் இருக்கிறது என்றால், எதற்காக?

பூநகரித் தோல்விக்குப் பழிவாங்கும் விதத்தில் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களை நடத்தி தமிழ்ப் பொதுமக்களை அழிப்பதற்கும் தமிழ் மண்ணைச் சிதைப்பதற்குமே அன்றி, வேறு எதற்கும் அல்ல.

### எழுபதுகளில் ஆரம்பம்

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தொடங்கியதில் இருந்தே சர்வதேச விதிமுறைகள், நடைமுறைகள், கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணாக நடப்பதில் ஸ்ரீலங்காவின் அரச படைகள் தமது 'கெட்டித்தனத்தைக்' காட்டி வருகின்றன!

தமிழர் உரிமைப் போராட்டம் 1970களில் தீவிரமான கட்டத்திற்குள் நுழைந்த வேளையிலேயே, சர்வதேச மனித உரிமைக் கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் மீறி சட்டவிரோதக் கைதுகள், தடுத்து வைத்துச் சித்திரவதைகள், விசாரணை என்ற பேரில் மிருகத்தனமான சித்திரவதைகள் என்று தொடங்கியவர்கள் சிங்களப் படையினர்.

கடந்த சுமார் கால் நூற்

## ஊரடங்குச் சட்ட நீடிப்பு வடக்கில் பழிவாங்கும் ஏற்பாடு

றாண்டில் குண்டு வீச்சுகள், எறிகணைத் தாக்குதல்கள் மூலம் நிராயுதபாணிகளான தமிழ்ப் பொதுமக்களை தூரத்தே நின்று அழிக்கும் அளவுக்கு படையினரின் அட்டூழியம் விஸ்தாரம் கண்டுள்ளது.

இப்போதெல்லாம் ஊரடங்குச் சட்டம் விதித்துத்தான் அரச படைகள் குண்டுவீச்சு நடத்துகின்றன என்பதில்லை. விடுதலைப் புலிகளின் இலக்குகளைத் தாக்கி அழிக்கிறோம் என்ற போர்வையுடன் எல்லா வேளைகளிலும், எந்த நேரத்திலும் தமிழ் மக்களின் குடியிருப்புகள் மீது குண்டு வீசுவதும், எறிகணை தொடுப்பதும், ஸ்ரீலங்காப் படையினரின் பொதுவிதிகளாகி விட்டன.

அதுபோலவே வணக்கஸ்தலங்கள், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், முதியோர் இல்லங்கள், பொதுமக்கள் கூடும் இடங்கள் என்பனவற்றின் மீது குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல் நடத்துவது என்பதை ஸ்ரீலங்கா படையினர் பொதுநியமமாக்கி விட்டனர். அதனால் அவர்கள் சர்வதேசக் கட்டுப்பாடுகள், பிரமாணங்கள், விதிமுறைகளைப் பற்றி சிறிதும் கவலைப்படுவதில்லை. தமிழர்களின் ''பயங்கரவாத''த்தை ஒழிப்பதற்கென்று, உள்நாட்டு யுத்தத்திற்கென்று ஸ்ரீலங்கா படைகள் தமக்கெனப் பல தனித்துவமான வரைவிலக்கணங்களை வகுத்துள்ளன. அவை சர்வதேச விதிகள், நியமங்கள், வரன்முறைகள், கட்டுப்பாடுகள், நடைமுறைகள் எனபனவற்றுக்கு முற்று முழுமையாக முரணானவையே!

தங்களது சொந்த வரைவிலக்கணங்களுக்குள்ளேயே அகப்படாத அட்டூழியங்களை துரதிர்ஷ்டவசமானவை

**இளையகாந்தி — உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

என்று கூறிச் சமாளிக்கும் திறமை படை உயர் அதிகாரிகளுக்கு உண்டு! அழிவை உண்டாக்கிய பின்னர் இவ்வாறு சமாளிப்பது, வேண்டுமென்றே கொலை செய்து விட்டு தற்செயலாக நடந்து விட்டதாக மன்னிப்புக் கேட்பது போலாகும்.

எனவே ஊரடங்கு நீடிக்குமா, நீக்கப்படுமா என்ற கேள்விவிடையற்றது ஸ்ரீலங்கா அரசும், படைகளும் தமிழ் மண்ணில் தமிழர்களுக்கு எதனையும் செய்யலாம்; எப்படியும் செய்யலாம்; கேட்பதற்கு எவருமில்லை என்ற நிலையே ......

★ ★ ★

### பேச்சுவார்த்தை நடக்குமா?

வடமாகாணத்தில் அமுலில் உள்ள ஊரடங்கு நீக்கப்படுமா என்ற கேள்வியைப் போலவே பூநகரித் தோல்வியைத் தொடர்ந்து அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் நாட்டம் கொள்ளுமா என்ற வினாவும் பலரது மனங்களில் எழுகின்றது.

பூநகரியில் அரசு — படைகள் — புலிகளிடம் கண்ட பெரும் தோல்வி எந்த வகையிலும் மறைக்க முடியாத ஒன்றாகி விட்ட [illegible] விஜேதுங்கா அரசுக்கு என்று [illegible] பில்லாதவாறு [illegible] சியல் நெருக்கடி ஒன்று தோன்றியுள்ளது. தெற்கில் நடக்கும் ஆயிரம் பூநகரி மரண வீடுகளும் தமிழருக்கு எதிரான இனத்துவேசத்தை மட்டும் மூட்டிவிடப்போவதில்லை. அரசாங்கத்துக்கு எதிரான உணர்வலைகளையும் கிளறிவிடும். தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு முறை எந்தளவு விலை கொடுக்க வேண்டியது என்ற மதிப்பீட்டையும் சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறும். சிங்கள மக்களுக்கென்ன ... சிங்களத் தலைவர்களுக்கும் தான்!

ஆனால் பூநகரித் தோல்வியால் தெற்கில் உண்டாகியுள்ள எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் எடுக்கப்போவதில்லை. இராணுவத் தீர்வு என்ற தனது முடிந்த முடிவை உடனடியாக மாற்றப்போவதும் இல்லை.

பூநகரி இராணுவத் தோல்விக்குப் பின்னர் பேச்சுவார்த்தை என்பது அரசாங்கம் மேலோங்கிய நிலையில் நிற்க நடக்காது. விடுதலைப் புலிகள் மேலோங்கிய நிலையில் நின்று பேசுவதாகவே அமையும். அது இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட்டை கைவிடுவதற்கு வழி செய்யும் என்பது ஒருபுறம். அரசியல் தீர்வு என்ற மேடையிலும், பேச்சுவார்த்தை மேசையிலும் பல விட்டுக் கொடுப்புகளுக்கு வழி சமைக்கும் என்பது மறுபுறம்.

அத்தகைய இரண்டும் கெட்டான் நிலையானது சிங்கள அரசுகள் தமிழர் விவகாரத்தில் இதுவரை தொடர்ந்து கடைப்பிடித்து வந்த இறுக்கமான, கடுமையான, தீவிரமான, அநீதியான போக்கை, கொள்கையை மாற்றுவதாக அமைந்துவிடும்.

எனவே, பூநகரித் தோல்வியால் உண்டாகியுள்ள எதிர்ப்பையும், நெருக்கடியையும் வேறுவிதமாகச் சமாளிக்கவும் சிங்கள மக்களைத் திசை திருப்பவுமே அரசு தந்திரமான திட்டங்களை வகுத்துச் செயற்படும் என்பதில் ஐயமில்லை.

தற்போதைய நெருக்கடியை ஒருவாறு சமாளித்துவிட்டு, தமிழர் தரப்பினரின் தற்போதைய இராணுவ மேலோங்கு நிலையை உடைப்பதற்கான சூழ்ச்சிகளில் இறங்குவதே அரசின் உள்நோக்கமாக அமையும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். அத்தகைய சூழ்ச்சித் திட்டத்தின் ஓரம்சமாக தமிழர் தரப்புடன் பேசுவது என்ற பொய்யான நாடகத்தை நடத்துவதற்கு அரசு சில வேளை முனையலாம். அந்தப் பொய் வேடத்தைக் கூட அது உடனடியாக தரிக்கமாட்டாது. தேர்தல் நெருங்கும் அடுத்த ஆண்டில் அப்படி ஒரு காயை நகர்த்திப் பார்க்க அரசு நினைக்கக் கூடும்.

### அணி சேரல்கள்

அதற்கு முன்னர் இராணுவ ரீதியாகத் தனக்கு ஏற்பட்ட பின்னடைவிலிருந்து முன்னேறிக் காட்டுவதற்கே அரசு பெரிதும் விரும்பும்.

அந்த வகையிலும் கூட, தெற்கில் சில கருத்து முரண்பாடுகளும், அணி சேருதல்களும் இருப்பதாக கொழும்புத் தகவல்கள் மூலம் தெரிய வருகிறது.

விஜேதுங்காவையே அடுத்த வருடம் நடக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிறுத்துவது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்திருக்கிறது. ரணிலை முன்னிலைப்படுத்த விரும்பும் ஜே. [illegible] முடிவு மண் போட்டுவிட்டது. [illegible]

வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற பிரேரணையை விஜேபால மெண்டிஸ் முன்மொழிய, வழிமொழிந்தவர் ரணிலே. எனினும் பிரதமராகப் பணியாற்றும் ஒன்றரை வருட அனுபவத்துடன் ஜனாதிபதியாக வரும் தகுதி தனக்கில்லையா என்ற கேள்வி அவரது மனதைக் குடையாமல் இருக்காது. அநுராவை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கொண்டு வந்ததினாலும் ரணில் மனத்தாங்கல் அடைந்திருக்கிறார். விஜேதுங்கா இது விடயத்தில் அவசரப்பட்டு விட்டதாக கருதுகிறார். தான் நாட்டில் இல்லாத வேளையில் அநுராவைக் ஐ.தே கட்சியில் சேர்த்தது டி.பி. யின் ஒருவித சூழ்ச்சி என்றும் ரணில் கருதுகிறாராம்.

இத்தகைய பின்னணியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுடன் ரணிலும் சேர்ந்து இராணுவச் சதிப் புரட்சி ஒன்றுக்கு வித்திட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று கொழும்பில் பலமாக ஊகிக்கப்படுகிறதாம்.

தமிழர் விவகாரத்தைக் கவனமாகக் கையாள வேண்டும் என்ற மென்போக்குடையவர் ஹமில்டன். கடும்போக்காளரான சிசில் வைத்தியரத்னாவுக்கும் ஹமில்டனுக்கும் இடையில் இது விடயத்தில் கருத்து முரண்பாடு பெரிதாக உண்டு. சிசில் வைத்தியரத்னா இராணுவத் தளபதியாக வந்த பின்னர் ஹமில்டனின் திறமையை உயர்பீடம் குறைத்து மதிப்பிடும்படியான பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

சிசில் வைத்தியரத்னாவின் மந்திரத்தில் மயங்கிய விஜேதுங்கா அவர் சொற் கேட்டு கூட்டுப்படைத் தலைமையகத்தைக் கலைத்தது அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்று.

இவற்றின் விளைவாக விஜே-சிசில் கூட்டும், ரணில்-ஹமில்டன் கூட்டும் தனித்தனி அணியாகச் செயற்படுவதாக பலமாகப் பேச்சடிபடுகிறது.

கொழும்பில் இராணுவப் புரட்சி நடந்தால் தமிழர் விவகாரம் புதிய வடிவம் பெறக்கூடும் ஆனால் அந்த வடிவம் தமிழருக்குச் சாதகமாக அமையுமா. அல்லது மேலும் சிக்கலையும் பாதகத்தையும் உண்டாக்குமா என்பதனை இப்போது சொல்வது கடினம்.

இராணுவத் தீர்வினால் தமிழர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர முடியாது என்று தேர்தல் நெருங்கும் காலத்தில் விஜேதுங்கா உணர்ந்து பேச்சுவார்த்தைக்கு வந்தாலும் —

தமிழ்த் தேசத்தை ஒடுக்கப்பட்ட தேசமாகவும், ஸ்ரீலங்காவை ஒடுக்கும் தேசமாகவும் தொடர்ந்து வைத்திருக்க சிங்களத் தலைவர்கள் விரும்பும்வரை அதுவும் பயனளிக்காது. ★

உதயகாந்தன்

## தண்ணீர் எனும் அருமருந்து

தண்ணீர் தாகம் தீர்ப்பதற்கு மட்டுமா பயன்படும்? அது, நோய்கள் பல தீர்த்திடும் அருமருந்தாகவும் பயன்படும்!

அல்சர் எனப்படும் குடற் புண்நோய், தொய்வு, இரத்த அழுத்தம், காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல், தடிமன், மலச்சிக்கல் முதலியவற்றைத் தண்ணீர் குணப்படுத்தவல்லது. இது நீர்ச்சிகிச்சை முறையாகும் (WATER THERAPY).

காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் (TYPHOID) நோயை எவ்வாறு குணப்படுத்தலாம்?

காய்ச்சல் நோய்க்கு உள்ளானவரின் வயிற்றில் தினமும் இரண்டு மூன்று தடவை ஈரத்துணிப்பட்டியால் மூடி, ஆகக் குறைந்தது 15 நிமிடங்கள், அது காயக்காய, அதன் மேல் நீரூற்றிவர வேண்டும் நோய் விரைவில் குணமடையக் காணலாம்

குடற்புண் நோய் உடையவர்கள் தினமும் அதிகாலையில் குறைந்தது ஆறு கிண்ணங்கள் குளிர்ந்த நீரைப் பருகி வந்தால் அந்நோய் குணமடையும்.

மேலும், இரத்த அழுத்தம் உடையவர்கள் தினமும் அதிகாலையில் குறைந்தது ஆறு கிண்ணங்கள் கொதித்து ஆறிய நீரைப் பருகிவந்தால், இரத்த அழுத்தம் குறைவடைவதைக் காணலாம்.

தடிமன் உடையவர்களும் ஆறு கிண்ணங்கள் குளிர்ந்த நீரைத் தினமும் அதிகாலையில் பருகுவதோடு குளிர்ந்த நீரில் குளித்தும் வந்தால் அது தீர்ந்து விடும்.

மலச்சிக்கலால் அவதிப்படுவோரும் இதேபோல், தினமும் அதிகாலையில் எழுந்தவுடன் ஆகக்குறைந்தது ஆறுகிண்ணங்கள் குளிர்ந்த நீரைப் பருகிவந்தால் சுகமாகும்!

இவ்விதம், தண்ணீரானது, தாகம் தீர்ப்பதுடன் நிற்காது, நோய் தீர்க்கும் கைகண்ட மருந்தாகவும் பயன்படுத்தப்படக் கூடியதாகும்!

வானொலி உரை ஒன்றிலிருந்து தொகுத்து எழுதியவர்.
ப. மகேந்திரதாசன்

## வீரப்பனை பிடிக்கும் நாள் நெருங்கி விட்டதாம்!

மைசூர், நவ. 21

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனைப்பிடிக்கும் நாள் நெருங்கி விட்டதாக கர்நாடக அதிரடிப் பொலீஸ் படை அறிவித்துள்ளது.

வீரப்பனின் கும்பலில் இருந்தவர்களின் எண்ணிக்கை 80 இல் இருந்து 14 ஆகக் குறைந்து விட்டது என்றும்— தமிழ் நாடு கர்நாடக எல்லைப்புற மகேஸ்வர மலைக் காட்டுப்பகுதியினுள் வீரப்பன் இப்போது சிக்கியுள்ளான் என்ம் தெரிவிக்கப்பட்டது.

### யாழ். மாநகரசபைப் பகுதியில்
## மரக்கன்றுகள் நடுகைக்கு ரூ. $1\frac{1}{2}$ லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் 1994 ஆம் ஆண்டிற்கான மரம் நடுகைக்காக ஒரு லட்சத்து நாற்பது ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக யாழ். மாநகரசபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனைவிட நல்லூர் பகுதியில் மரங்களை நாட்டுவதற்கும் 75,000 ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இதற்கான நிதியை நல்லூர் பிரதேச செயலாளரிடம் கோரப்படும் என்றும் —

அடுத்தாண்டு யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் சுமார் ஆயிரம் மரங்கள் வரையில் நடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-17)

**கூட்டும் குப்பை சேர்த்திடு- அதை கட்டுப்பணமாய் பார்த்திடு**

## இணைப்பாளர் பதவி

யாழ்ப்பாணம், நவ. 21

வடமராட்சி, யாழ்ப்பாணக் கோட்ட தனியார் கல்வி நிலையங்களை மேற்பார்வை செய்வதற்கு இணைப்பாளர் தேவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாகரிக....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யப் போகும் புதிய அரசு எதிர்நோக்கும் சவாலாக உள்ளன.

27 04 1994

ஒருவருக்கு ஒருவாக்கு என்ற அடிப்படையில் புதிய தேர்தல் 27-04-1994 இல் நடைபெறவுள்ளது.

கறுப்பு மற்றும் வெள்ளை இன வாக்காளர்களை விட 30 லட்சம் கறுப்புநிற வாக்காளர்களும், 10 லட்சம் ஆசிய வாக்காளர்களும் இத்தேர்தலில் வாக்களிக்கவிருக்கின்றனர்.

நிறவேற்றுமைக் கொள்கை காரணமாக இவர்கள் பாதிக்கப்பட்டிருப்பினும், பழமைவாதப் போக்கைக் கொண்ட இவர்கள் ஜனாதிபதி டிகிளேர்க்குக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது,

குறைந்தது 34 சதவீத வாக்குகளைத் தம்மால் பெற முடியும் என்று டி கிளேர்க் நம்புகின்றார்.

எப்படியிருப்பினும் —

கறுப்பு இன மக்களின் அமோக ஆதரவு பெற்றுள்ள நெல்சன் மண்டேலாவே புதிய தென் ஆபிரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என்பது உறுதியாகி விட்டது.

மண்டேலாவும் முதல் தடவையாக எதிர்வரும் தேர்தலில்தான் வாக்களிக்க இருக்கிறார்.

உலகின் 'கறை'யை துடைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மண்டேலா — கிளேர்க் இவ்வாண்டுக்கான நோபல் சமாதானப் பரிசை பகிர்ந்து கொள்வது சாலவும் பொருத்தமானதே. ★

## தென்னாசியாவில்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வு நமக்குத் தெரிந்ததே.

இவர்கள் எத்தனை எத்தனை சபதங்களை நெஞ்சில் கொண்டிருக்கிறார்களோ?

### பர்மாவில் மகள் ஆங் சான்

பர்மாவில் சிறையில் வாடும் ஆங்சான் சுகியின் தந்தையான தேசியவாதத் தலைவர் ஜெனரல் ஆங் சான் 1947இல் படுகொலை செய்யப்பட்டார். அவரின் மகள் தேர்தலில் வெற்றியீட்டிய போதிலும் இராணுவம் ஆட்சிக்கு வர விடாததால் சிறையில் வாடுகிறார்.

தந்தையின் நினைவைத் துணைகொண்டே மகள் ஆங் சான்சுகி கொடிய நீண்டகால சிறை வாழ்க்கையை — இராணுவ ஆட்சியாளரின் கொடுமையை — துணிவுடன் தாங்கி வருகின்றார். ஆட்சி கைக்குக் கிடைத்தால் அவர் செய்யப் போவது என்ன?

### மேனகா காந்தி

இந்தியாவில் காலஞ்சென்ற சஞ்சய் காந்தியின் மனைவியான மேனகா காந்தியும் இந்தப் பழிவாங்கும் பாஞ்சாலிகளில் ஒருவராக இருக்கின்றார்.

கணவன் சஞ்சய் விமான விளையாட்டில் இறந்த பின் மாமியார் இந்திரா காந்தி தன்னை ஒதுக்கி அவமானப்படுத்தி விட்டார் என்று மேனகா கருதுகின்றார். இது அவரை அரசியலில் மிகவும் கடினமானதோர் பெண்ணாக்கியுள்ளது.

சஞ்சய்யின் மரணம் மட்டும் அல்ல, இந்தியாவின் அவசரகாலத்தில் சஞ்சய்யின் பாத்திரத்தை ஒட்டியபிணக்கு ஒன்றில் அவருடைய தந்தையார் தம்மைத் தாமே சுட்டுக் கொன்றதும் மேனகாவின் இதயத்தைக் கடினமாக்கியுள்ளன.

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டபின் சோனியா, பழிவாங்கப் பதவிக்கு வரும் இந்தப் பத்தினிகளின் பட்டியலில் சேர்ந்து கொள்ளவில்லை.

ஆனால் சோனியாவின் மகளான, இப்பொழுது 21வயதாகும் பிரியங்கா எதிர்காலத்தில் இந்த அணியில் சேரலாம் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

கணவன்மாரையும் தந்தைமாரையும் படுகொலைகளில் பறிகொடுத்த தென் ஆசியப் பெண்கள் பாஞ்சாலிகளின் பட்டாளம் ஒன்றையே உருவாக்கியுள்ளனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை தியாகராஜா L.L.B.
(சட்டத்தரணி)

செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாக வும், 121, சென். பெனடிக்ற் மாவத்தை கொழும்பு 13ஐ வதிவிடமாகவும் கொண்ட சட்டத்தரணியும், D. N. துரைராஜா அன் கோ பங்காளருமான கனக சபை தியாகராஜா அவர்கள் கொழும்பில் காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சிவசங்கர், திருமதி ரோகிணி, திருமதி கௌசல்யா, ராம்சுந்தர், யசோதா ஆகியோரின் பாச மிகு தந்தையும், காலஞ்சென்ற மெய்கண்டான் இரத் தினசபாபதி, மனோன்மணி இரத்தினசபாபதி ஆகியோ ரின் நேசமிகு மருமகனும், திருமதி மகேஸ்வரி தெய் வதவபாலன், திரு. சுப்பிரமணியம் (வவுனியா) திருமதி ஜெகதீஸ்வரி சிற்சபேசன் ஆகியோரின் அன்பு மிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-11-93 சனிக் கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேஸ்வரி தெய்வதவபாலன்
(சகோதரி)

செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு. (28128)

### ஆறுமுகம் தம்பிராசா

புங்குடுதீவு கிழக்கு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பிராசா அவர்கள் 18-11-93 வியாழக்கிழமை சேமமடுவில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி ஆறுமுகம், அன்னப் பிள்ளை தம்பதிகளின் மகனும் புங்குடுதீவு கிழக்கு திரு திருமதி கதிர்காமு சின்னம்மா தம்பதிகளின் மருமக னும், அமராவதியின் அன்புக் கணவரும், வரதலெட் சுமி, இராசலெட்சுமி, இராதாலெட்சுமி, ஜெயலெட்சுமி (சுவிஸ்) ஸ்ரீவரதன் (சுவிஸ்) அம்பிகாபதி (சுவிஸ்) சோதிலெட்சுமி (சுவிஸ்) உருத்திரன் (சுவிஸ்) உதயந் தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம் சென்ற பத்மநாதன் (ரஸ்கன் ரவல்ஸ் கொழும்பு) சிவராசா (சுவிஸ்) ஜெகநாதன் (சுவிஸ்) கருணாகரன் (சுவிஸ்) சிவயோகலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலம் சென்ற குணசிங்கம், ரேவதி, கன கம்மா, காலம் சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சண்முகம், காலம் சென்ற வள்ளியம்மை (தேவி), நடராசா, பொன்னம்மா ஆகியோரின் சகல னும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இல 186, 2 ஆம் யூனிற், சேமமடு குளத்தில் நடைபெற்றன. இவ்வறிவித் தலை உற்றார், உறவினர் சகலரையும் ஏற்றுக் கொள் ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்
ரேவதி

186, 2 ஆம் யூனிற்,
சேமமடுக்குளம். (28125)

### செல்லையா சேனாதிராஜா

கோண்டாவில் அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த செல்லையா சேனாதிராஜா 20-11-93 இல் சிவபதம் அடைந்தார்.

இவர் செல்லக்கண்டுவின் அன்புக் கணவரும், இந்திராணி, செல்வநாயகம், வேல்முருகன் (உரிமை யாளர்கள் செல்வா ரான்ஸ்போட், மதுபான மொத்த விற்பனை நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், அன்ரோ மதுபானச் சாலை, நக்கா வீதி, யாழ்ப் பாணம், மதுபானச்சாலை, பளை), சுகந்தமலர், தவமலர், முருகானந்தன் (ஜேர்மனி), தங்கமலர், ராஜ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தை யாரும், கதிர்காமத்தம்பி, செல்வரட்ணம் (கனடா), திருஞானசம்பந்தர் (திருமகள் புடைவை அகம், யாழ்.), சிவகணேசன், சகுந்தலாதேவி, மோகனமலர், இராஜ கன்னிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், லோகேஸ் வரன், சஜீவன், ரஜீவன், அபர்ணா, ஹம்சாயினி, செந்தூரன், சிந்துஷா, ஆரூரன், அர்ச்சனா, நிரோ ஷினி, திருவரன், அகிரினி, தேவகி, தெய்வச்சந்திரன், துஷிகா, சோபிகா, அபி, சேயோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-11-93) முற்பகல் 11 மணியளவில் அம்மன் கோவிலடி, கோண் டாவிலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடை பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோண்டா வில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
சே. வேல்முருகன்
(மகன்)

சே. வேல்முருகன்,
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கோண்டாவில். (28129)

### மு. வ. சிவக்கொழுந்து

இணுவில் கிழக்கைச் சேர்ந்த பிரபல புகையிலை வியாபாரி மு. வ. சிவக்கொழுந்து 20-11-1993 இல் காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன் புக் கணவரும், சத்தியபாமா, லோகேந்திரன் (மருந்தா ளர் ஓமான்), இந்திராணி சிவலோகநாதன் (Kreston N. M. S. & Co), வாமதேவன் (நீர்ப்பாசன இலாகா வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராஜா, தயாளலக்ஷ்மி, இராஜரெத்தினம் திரி புரநாயகி, இந்திராகாந்தி ஆகியோரின் மாமனாரும், கலாமோகன், வனஜா, சத்தியமூர்த்தி சத்தியராஜா, கௌரிகாந்தன், கௌரிசங்கர், சாந்தினி, விஜிதரன், வசந்தரூபன், ஞானச்செல்வன், கோகுலன், யதுகுலன், ஜயந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிந்துஜா வின் பூட்டனுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று ஞாயிறு (21-11-1993) காலை நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்,
சி. வாமதேவன்
(மகன்)

அண்ணமார் கோவிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (28127)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறை வேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21-11-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சர்வதேச சமூகத்தின் தலையீட்டை அரசு நீண்ட காலத்துக்கு தவிர்க்க இயலாது

## புலிகளின் தாக்குதல் திறன் அதிகரித்துள்ளது

வெரித்தாஸ் வானொலி தனது உண்மையின் எண்ணங்கள் நிகழ்ச்சியில் ''பூநகரி உணர்த்தும் பாடம் என்ன?'' என்ற தலைப்பில் ஒலிபரப்பிய விமர்சனத்தின் தொகுப்பு இதுவாகும்.

ஒளாலியை கைப்பற்ற இராணுவம் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் பூநகரி தாக்குதல் என நம்பப்படுகிறது. எம் மீது நடத்தப்படும் பாரிய தாக்குதலுக்கு பதிலடி கடுமையானதாக இருக்கும் என்பதை புலிகள் நேரடியாக உணர்த்தியுள்ளனர். அதாவது யாழ்ப்பாணத்தைப் பிடிக்க இராணுவம் இறுதியாக தாக்குதல் நடத்தினால் அதன்பின் விளைவுகள் கடுமையானதாக இருக்கும் என்பதை விடுதலைப் புலிகள் சொல்லாமல் சொல்லியுள்ளனர்.

இந்தப் போர் எப்போது ஓய்ந்து நிம்மதி பிறக்குமோ என அங்கலாய்த்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கு தாம் வலுவான நிலையில் இருப்பதான பிரசாரத்தை முன்னெடுத்துச் செல்ல விடுதலைப் புலிகளுக்கு பூநகரி முகாம் தகர்ப்பு உதவக்கூடும்.

தலைநகரில் இருந்து கொண்டு அரசு எப்போது எப்படி பிரச்சினைக்குத் தீர்வை கொண்டு வரும் எனக் காத்திருக்கும் தமிழர்களின் அரசியல் கட்சிகளுக்கும் அரசை ஆதரிக்கும் முன்னாள் தமிழ் போராளிக் குழுக்களுக்கும் பூநகரி தாக்குதல் மூலம் மீண்டும் முக்கியத்துவம் கிடைக்கக் கூடும். ஏனெனில் இதுபோன்ற இராணுவப் பின்னடைவுகளை அரசு சந்திக்கும் போது மட்டுமே மிதவாதத் தமிழ் குழுக்களை அரவணைத்து தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக ஏதாவது தீர்வு கண்டாக வேண்டும் எனும் உத்வேகம் அரசுக்குப் பிறப்பதுண்டு. மற்றைய நேரங்களில் எல்லாம் அரசு இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாகக் கண்டு கொள்வதில்லை என்பதுதான் இலங்கையின் நடைமுறை உண்மை.

### தெரிவுக் குழு

நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறோம் என அரசு இதுவரை கூறி வந்தது. தற்போது அதுவும் இல்லாமற் போயிற்று.

இலங்கையில் இனப்பிரச்சினை என ஒன்று இல்லை இருப்பதெல்லாம் பயங்கரவாதப் பிரச்சினையே என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறி வருகிறார். இதையும் கேட்டுக் கொண்டு தொடர்ந்து அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் என தமிழ் அரசியல் கட்சிகள் நம்பிக்கை கொண்டுள்ளன.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசு முதல் தற்போதைய அரசு வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாம் அரசியல் தீர்வையே நம்புகிறோம் என உதட்டளவில் கூறி வந்தாலும், போராளிகளை இராணுவம் பூண்டோடு ஒழித்து விட்டால் பிரச்சினையை எளிதாக முடித்து விடலாம் என்று தான் உறுதியாக நம்புகிறார்கள்.

''ஆற்றோடு போனாலும் போவதே அல்லாமல் தெப்பக்காரனுக்கு ஒரு காசு கொடுக்கிறதில்லை'' என்பதாக இருக்கிறது இவர்களது நடவடிக்கை.

### சமாதானத்தை நாடவில்லை

அரசின் இராணுவ நிதி ஒதுக்கீடு அதிகரிப்பும், கனரக ஆயுதங்களை அரசு வாங்கிக் குவிப்பதும், தற்போது சுமார் 10 ஆயிரம் சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்திருப்பதும் அரசு இராணுவத் தீர்வை அதிகமாக நம்புவதையே உணர்த்துகின்றன. இராணுவத்தை நூறு வீதம் பலப்படுத்தும் அரசு சமாதானத்துக்காக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

சர்வதேச அமைப்புக்கள் இலங்கைப் பிரச்சினையில் தலையிட விருப்பம் தெரிவித்திருப்பதும்— பலர் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளின் கருத்துக்களைக் கேட்டு அறிந்திருப்பதும் —

இலங்கையைப் பிளவுபடுத்தாத சமஷ்டி அமைப்புக்குத் தாம் இணங்கலாம் என புலிகளின் உயர் தலைவர் பிரபாகரன் அறிவித்திருப்பதும்— இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை எளிதாக்கியுள்ளன.

''தானாய் வந்த சீதேவியை காலால் உதைத்த கதையாக'' இலங்கை அரசு தொடர்ந்து நடந்து வருகிறது. இனப் பிரச்சினையில் நீண்ட காலத்துக்கு சர்வதேச சமூகத்தின் தலையீட்டை இலங்கை அரசால் தொடர்ந்து நிராகரிக்க முடியாது.

### முஹம்மதுவின் பணி

''இலங்கைப் பிரச்சினை எமது உள்நாட்டுப் பிரச்சினை'' என அண்மையில் வெளியுறவு அமைச்சர் ஹமீத் கூறியுள்ளார்,

தற்போது நாடாளுமன்ற சபாநாயகர் முஹம்மது வடக்கே சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்கத் திட்டமிடுவதும்—

அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைத் தொடர்ந்து ஆதரித்து வருவதும்— இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்னும் அரசின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த புதிய நெருக்கடிகளைத் தோற்றுவிக்கலாம். இந்நிலையில் சபாநாயகர் முஹம்மதுவின் வருகையை விடுதலைப் புலிகள் சாதகமாகப் பயன்படுத்தி முஸ்லிம் கட்சிகளுடன் ஓர் இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டு.

பூநகரி முகாம் தகர்ப்பு மட்டுமல்ல — ஒளாலியில் தொடர்ந்து நடக்கும் படகுப் போக்குவரத்து, பலாலி முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் —

கடந்த யூலை மாதம் மண்கிண்டிமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் —

மன்னாரில் 20 மைல் பிரபிரதேசத்தைச் கைவிட்டு கடந்த ஆகஸ்டில் படையினர் வங்காலை, தள்ளாடி முகாம்களுக்குத் திரும்பிச் சென்றமை —

''யாழ்தேவி'' இராணுவ நடவடிக்கையின் தோல்வி — என அடுத்தடுத்த இராணுவத்தின் சமீபத்திய பின்னடைவுகள் அரசுக்கும் புலிகளுக்கும் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றால் புலிகள் வலுவான நிலையில் அதில் கலந்துகொள்ளும் நிலையை உருவாக்கக் கூடும். எனவே இந்நிலையில் பேச்சு நடத்த அரசு விரும்பாது எனக் கொள்ளலாம்.

### திறன் அதிகரிப்பு

விடுதலைப் புலிகளிடமிருந்து இராணுவம் சில பகுதிகளைக் கைப்பற்றுவது தொடர்ந்தாலும் புலிகளின் தாக்குதல் திறன் அதிகரித்திருப்பதையே அவதானிக்க முடிகிறது பூநகரி முகாமில் இருந்து விடுதலைப்புலிகள் எடுத்துச்சென்றிருக்கும் ஆயுதங்கள் புலிகளின் அடுத்த தாக்குதலுக்கு மேலும் பலம் சேர்த்திருப்பதும் இராணுவத்தை கலக்கமடையச் செய்துள்ளது.

கிழக்கு மாகாணத்தை தம் வசம் வைத்துக் கொள்ளக் கடும் நடவடிக்கை எடுப்பதை விட விடுதலைப் புலிகளின் தலை போன்ற யாழ்ப்பாணத்தை தகர்க்க இராணுவம் தீவிர திட்டமிட வேண்டும் என்னும் யோசனை தற்போது இராணுவத்தின் மத்தியில் பரவலாகப் பேசப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

ஆயினும் வடக்கு, கிழக்கு மாகாணத்தையே அரசு தனது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தாலும் கூட— பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்தாமல் வெறும் இராணுவ வெற்றி மூலம் பிரச்சினை தீர்ந்துவிடும் என சிங்கள அரசியல்வாதிகளோ இனவாதிகளோ எதிர்பார்த்தால் அது உலக வரலாறு அறியாத அறியாமைதான். எந்தப் போராட்டங்களும் தீர்வுகள் இன்றி நின்றதில்லை (அ-5)

## இந்திரா காந்தி சமாதானப் பரிசு

மணிலா, நவ. 21

1993 ஆம் ஆண்டுக்கான இந்திராகாந்தி சமாதானப் பரிசு செக்கோஸ்லேவிய ஜனாதிபதி வாக்லர் ஹேவருக்கு வழங்கப்படுகிறது. 1992 ஆம் ஆண்டுக்கான பரிசு ஜப்பான் நாட்டின் பொருளாதார வல்லுநர் காலஞ்சென்ற ஒக்கியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

## முன் எப்போதுமே ..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரி முகாம் புலிகளால் தாக்கப்பட்டபோது கேர்ணல் ரஞ்சித் சில்வா முகாமிலேயே இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி முகாம் 11 ஆம் திகதி 1.10 மணியளவில் தாக்கப்பட்டது என்றும்— முகாமில் இருந்தவர்களை விட பல மடங்கு அதிகமானவர்கள் தாக்குதல் நடத்தினர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-9)

## மாவீரர் ..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து மலரஞ்சலி, தீபாஞ்சலி செய்ய நீண்ட பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினம் இன்று காலை 9 மணிக்கு தேசிய கீதம் இசைக்கப்பட்டு தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டு இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்துவதுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து மாவீரர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்படும். (க-15-17-117-றி)

## இணைப்பாளர் ...
(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு, ஜி. சி. ஈ. சாதாரணம், உயர்தரத் தேர்வு ஆகியவற்றில் சித்தி அடைந்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பதாக தனியார் கல்வி நிலைய மேற்பார்வையாளர் அலுவலகம், இல. 19, செம்மணி வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும் படியும் —

டிசம்பர் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ள நேர்முகத் தேர்வில் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் அனுபவம், மேலதிகத் தகைமையினை வெளிப்படுத்துவதற்கான சான்றிதழ்களுடன் சமுகம் தரும்படியும் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் ஆண்களாக இருக்க [illegible] என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அமைச்சர் விமல் கூறுகிறார்

# சமஷ்டியைவிட கூடுதலான அதிகாரங்கள் வழங்கத் தயார்

### ஆனால்வேறு பெயரிலாம்

லண்டன், நவ. 21

'' 'சமஷ்டி' என்ற சொற்பிரயோகமே சிங்கள மக்களை வெறுப்படையச் செய்கிறது. அந்தச் சொல்லை நீக்கிவிட்டு வேறு ஏதாவது பதத்தைப் பயன்படுத்தி சமஷ்டிக்கு மேலான அதிகாரத்தைக் கூட தமிழர்களுக்கு வழங்கலாம்''

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும், சுற்றாடல் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சருமான டாக்டர் விமல் விக்கிரமசிங்கா இவ்வாறு கூறியுள்ளார்.

பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் அரசு ராணுவ நடவடிக்கைகளை எடுத்து வருவது சம்பந்தப்பட்டவர்களை பேச்சுக்கு வரச் செய்யும் நோக்குடனேயே ஆகும். ஆயினும் யுத்த நடவடிக்கைகளினால் பாதகமான விளைவுகளையே நாடு சந்திக்கிறது.

விடுதலைப் புலிகள் சமஷ்டி முறைக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆனால் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் சமஷ்டி முறைக்கு அரசு எதிராகவே உள்ளது. ஆயினும் சமஷ்டி என்ற பெயர் இன்றி சமஷ்டி முறையிலும் கூடிய அதிகாரங்களை பரவலாக்குவதற்கு அரசு தயாராக உள்ளது.

இப்படி அவர் கூறினார். (இ-5-6)

# சிங்களத்தைப் பாதுகாக்க புத்திஜீவிகள் அழைப்பு

சிங்களம் அழிந்து கொண்டிருக்கிறது. அதனைக் காப்பாற்ற புத்தி ஜீவிகள் முன் வரவேண்டும்.

பிரபல சிங்கள இலக்கியவாதியும், மொழி ஆராய்ச்சியாளரும், வரலாற்று ஆசிரியருமான அரியன் அஹங்புது மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இரத்மலானை ஶ்ரீமானந்த தர்ம பாடசாலையில் நடந்த வைபவம் ஒன்றில் அவர் உரை நிகழ்த்தினார்.

''சிங்களம் அரசகரும மொழியாக இருந்த போது இலங்கையின் 7 மாகாணங்களில் அது அமுலில் இருந்தது. இன்று வடக்கு — கிழக்கில் அமுலில் இருக்கவில்லை.

ஆனால் தற்போது தமிழும் அரசகரும மொழியாக்கப்பட்டுள்ளது. இலங்கையின் 9 மாகாணங்களிலும் தமிழ் அமுல் செய்யப்படுகிறத.

ஆனால் சிங்களம் தொடர்ந்து 7 மாகாணங்களில் மட்டுமே அமுலில் இருந்து வருகிறது.

எனவே முழு நாட்டிலும் பாவிக்கப்படும் மொழியாக தமிழே இன்று இருந்துவருகிறது.

சிங்களப் பிள்ளைகள் தமிழைப் படிக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படுகிறது; ஆனால் தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் படிக்க கட்டாயப்படுத்தப் படுவதில்லை.

ஒரு மொழி அழிந்துபோகும் போது இனமும் அழிந்து விடும்.

சிங்கள நாட்டை சிங்களவர்களுக்கு இல்லாமல் செய்ய தற்போது முழு முயற்சிகளும் செய்யப்படுகின்றன.

வடக்கு – கிழக்கில் இருந்த சிங்களவர்கள் அனைவரும் ஓடிப்போய் மத்திய மலைநாட்டிலும், ஊவா மாகாணத்திலும் இருக்க முழு நாடும் யுத்த பூமியாக மாறிஉள்ளது.

இப்படி அவர் கூறி உள்ளார். (இ-9)

## கொலையுண்ட படையினர்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இவர்களில் 241 பேர் இராணுவத்தினர் என்றும் ஏனையோர் கடற்படையினர் என்றும் —

396 பேரைக் காணவில்லை எனவும் அவர்கள் பெரும்பாலும் உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் — இராணுவம் நம்புவதாகக் கூறப்பட்டது.

இதேவேளை ரூபவாஹினி நேற்று தனது செய்தி ஒலிபரப்பில் பின்வருமாறு தெரிவித்தது.

பூநகரித் தாக்குதலின் போது அந்த முகாமில் 1,800 படையினர் இருந்தனர். 620 பேர் மரணமாகியோ அல்லது காணாமலோ போயுள்ளனர். 195 படையினரின் சடலங்கள் பூரண இராணுவ மரியாதை [illegible] அடக்கம் செய்யப்பட்டன.

ரூபவாஹினியின் செய்தியா[illegible]ளரான ஷேர்லி அமீன் த சில்வா பூநகரிக்குச் சென்று திரட்டிய செய்திகளும், பூநகரி முகாம் புனரமைப்பு தொடர்பான தொலைகாட்சிப் படங்களும் நேற்று ரூபவாஹினியில் காட்டப்பட்டன.

இதேவேளை இந்திய 'தூரதர்ஷன்' 400 படையினரைக் காணவில்லை என்றும் 70 படையினரை விடுதலைப் புலிகள் கைதிகளாகத் தடுத்து வைத்திருப்பதாகவும் கொழும்புத் தகவல்களை மேற்கோள் காட்டித் தெரிவித்தது.

கொழும்பில் இத்தகைய முரண்பாடான எண்ணிக்கைகள் வெளியான அதே வேளை —

பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் பூநகரித் தாக்குதலில் 1,000 படையினர் மாண்டதாக நேற்று அறிவித்தது. (அ-க-5 6-9)

## பிற்போடப்பட்டுள்ளது

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தினரால் இன்று (21-11-1993) மாலை 5 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்க இருந்த சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களினால் எதிர்வரும் வியாழக்கிழமை (25-11-1993) மாலை 5 மணிக்கு நடைபெறும் என்பதை அனைவருக்கும் தயவுடன் அறியத்தருகின்றோம்.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு
நிறுவன விளையாட்டுக்கழகம்

426, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம். (28131)

## மரண அறிவித்தல்

### திருமதி C. S. நாயகம்

பத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 102, டேவிற் றோட்டில் வசித்தவருமான திருமதி C. S. நாயகம் அவர்கள் காலமாகிவிட்டார்.

இன்று 21-11-1993 பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்சிமாதா கோவிலில் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து இறுதிச் சடங்குகள் இடம் பெறும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்,
பிள்ளைகள், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆயர் இல்லம். (28126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org